# கூவிப்பிதற்றலன்றி

## கவியரங்க கவிதைகள்



சோ.தேவராஜா

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூவிப் பிதற்றலன்றி...

கவியரங்க கவிதைகள்

சோ. தேவராஜா


கலாலயம் பதிப்பகம்
இல. 68, நீதிமன்ற வீதி,
மல்லாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| Book Tittie: | kuuvip pitharralanri... |
| subjust : | Collection of Poems of Poetry Forum |
| Author: | S. Thevarajah |
| Pupilsh by : | KALA LAYAM PATHIPPAGAM<br>No. 68, Court Road,<br>Mallakam, Srilanka |
| Published No: | 12 |
| Pages : | vi+ 50 |
| Size : | semy |
| First edition : | November, 2023 |
| Cover Design : | S.T.Anujan |
| Price : | 300/= |
| Printed by : | J.S.Printers<br>Sillalai Road,<br>Pandatheruppu |
| I S B N - | 978-624-93177-1-0 |

| | |
|---|---|
| நூற் பெயர்: | கூவிப் பிதற்றலன்றி... |
| பொருள் : | கவியரங்கக் கவிதைகள் |
| நூலாசிரியர்: | சோ. தேவராஜா |
| வெளியீடு : | கலா லயம் பதிப்பகம்<br>இல. 68, நீதிமன்ற வீதி,<br>மல்லாகம், இலங்கை |
| வெளியீட்டு இல: | 12 |
| பக்கங்கள் : | vi + 50 |
| நூலின் அளவு : | செமி |
| பதிப்பாண்டு : | நொவம்பர், 2023 |
| அட்டை வடிவமைப்பு : | எஸ். ரி. அனுஜன் |
| விலை : | 300/= |
| அச்சகம் : | ஜே. எஸ். பிறின்ரேஸ்,<br>சில்லாலை வீதி,<br>பண்டத்தரிப்பு |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



***சமர்ப்பணம்***
***அன்புமாமா சிவலிங்க அம்மான்***
***மாமிக்கு***
***(நடராஜா மகாதேவர்***
***மகாதேவர் இராசேஸ்வரி)***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளடக்கம்


| | |
|---|---|
| பண்பாடு உயர்ந்திடப் பாடு | 01 |
| கனவு மெய்ப்பட வேண்டும் | 09 |
| தருமம் மறுபடி வெல்லும் | 17 |
| மனிதம் மண்ணில் உயரும் வரை | 25 |
| ஊருக்கு நல்லது சொல்வேன்– எனக்கு உண்மை தெரிந்தது சொல்வேன் | 32 |
| எமக்கும் சிவக்கின்ற வானம் வரும் | 38 |
| கூடிப் பிதற்றலன்றி | 41 |
| ஒரு சில விதி செய்வோம் | 45 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

கவிஞர் சோ. தேவராஜா 1970 களிலிருந்து கவிதைகள் எழுதி வருபவர். திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலயத்திலும் செங்குந்த இந்துக்கல்லூரியிலும் மாணவனாயிருந்து கல்வி கற்ற காலத்திலிருந்தும் பண்டத்தரிப்பு காலையடி மறுமலர்ச்சி மன்றத்தின் 'காலைக்கதிர்' கையெழுத்து சஞ்சிகைகளிலிருந்தும் அவரது கவிதைகள் தோற்றம் பெற்றன. கொழும்பு பல்கலைக் கழகம், கொழும்பு மருதானை தொழில் நுட்பக் கல்லூரி, தேசிய கலை இலக்கியப் பேரவை, கொழும்புத் தமிழ்ச் சங்கம், யாழ்ப்பாணத்தில் அராலி சரஸ்வதி வித்தியாலயம் முதல் பல பாடசாலைகள், சனசமூக நிலையங்கள் எனப் பல்வேறு அரங்குகளிலும் கடந்த ஐந்து தசாப்தத்தில் நூற்றுக்கு மேற்பட்ட கவியரங்கங்களில் கலந்து சிறப்பித்தவர்.

பாரதியார், பாரதிதாசன், காசி ஆனந்தன், சொக்கன், காரை சுந்தரம்பிள்ளை, கவிஞர் கந்தவனம், அரியாலையூர் ஐயாத்துரை, புதுவை இரத்தினதுரை, இ. சிவானந்தன், கல்வயல் குமாரசாமி, மஹாகவி உருத்திரமூர்த்தி, நீலாவாணன் கவிஞர் இ. முருகையன், சோ.ப, சி. சிவசேகரம், ஆகிய கவிஞர்களின் கவிதைகளால் கவரப்பட்டவர்.

மக்கள் படும் கொடுந்துயர் கண்டு கொதிப்பவர். தேசிய இன ஒடுக்கல், வர்க்கம், சாதி, மத, பால் ஒடுக்கல்களைச் சகிக்காதவர். கவிதைகளை போராடும் ஆயுதமாக பாவித்து மகிழ்பவர்.

'தாயகம்- கவிதைகள் 66' என்ற நூல் 1980களில் வெளிவந்தது. இதில் இவரது ஐந்து கவிதைகள் வெளிவந்தன. தேசிய கலை இலக்கியப் பேரவை 2001இல் இவரது 'ஆச்சி' என்ற கவிதைத் தொகுதியை வெளியிட்டது. இப்போது 'கூவிப்பிதற்றலன்றி' என்ற இவரது கவியரங்கக் கவிதைகளை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

2022-ல் மக்கள் கவிஞர் சி. சிவசேகரம் எழுதிய 'ஆச்சியின் கொண்டையூசிகள்' என்ற கவிதை நூலைத் தொடர்ந்து இந்நூல் வெளிவருகிறது.

வாசகர்களின் விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன.

கலா லயம் பதிப்பகம்
68, நீதிமன்ற வீதி
மல்லாகம்

பாவலர் அழ. பகீரதன்
2023.11.01

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

இந்த நூற்றாண்டின் முதலாவது தசாப்த காலத்தில் ஒன்பது கவியரங்குகளில் வாசித்த கவிதைகள் இந்நூலில் வெளியிடப்படுகின்றன. 1974-ல் இலங்கை பல்கலைக்கழக கொழும்பு வளாகத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்ற இளந்தென்றல் கவியரங்கில் 'நெடும்பயணம் நிறையும் வரை நெஞ்சே உனக்கு ஓய்வில்லை' என்ற தலைப்பில் பங்குபற்றினேன். அதன் முன்னரும் பின்னருமாக பல கவிஞர்களுடன் பல அரங்குகளில் பங்குபற்றியுள்ளேன்.

கைக்கெட்டிய கவியரங்கக் கவிதைகளை பாவலர் அழ. பகீரதன் தொகுத்து- நூலாகப் பதிப்பித்து வெளியிட முன்வந்துள்ளார்.

எனது இளமை வாழ்வின் திருப்புமுனையாக அமைந்த எனது தாயாரின் சகோதரரும் அவரது துணைவியுமான எனது மாமா, மாமி ஆகிய சிவலிங்கம்மானுக்கும் மாமிக்கும் இந்நூலினை காணிக்கையாக்கிச் சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இக்கவியரங்குகளை ஏற்பாடு செய்த நண்பர்கள், தோழர்களுக்கும், தேசிய கலை இலக்கியப் பேரவை, கொழும்புத் தமிழ்ச் சங்கம், கலா லயம் பதிப்பகம், புத்தகப் பண்பாட்டுப் பேரவை பங்காளர்களுக்கும் எம்மோடு இணைந்து பணியாற்றும் அன்பு நெஞ்சங்கள் குறிப்பாக தோழர் சி.கா. செந்திவேல், தாயகம் ஆசிரியர் க. தணிகாசலம், ச. சஜிலன், ச. தனுஜன், ச. அனுஜன், பா. கஜீபா, சு. கர்ணிகா, பாவலர் அழ. பகீரதன், அச்சகர் லிஹான் அவர்களுக்கும் நன்றிகள்.

அரசடி வீதி, பண்டத்தரிப்பு.

sothevarajah@gmail.com

T.P 0778851989

சோ. தேவராஜா

2023.11.01



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1

# பண்பாடு உயர்ந்திடப் பாடு

**வணக்கப்பா**

'தேடிச் சோறு நிதந்தின்று- பல
சின்னஞ்சிறு கதைகள் பேசி
வாடித்துன்பம் மிக உழன்று- பிறர்
வாடப்பல கதைகள் சொல்லி
நரைகூடிக் கிழப்பருவம் எய்தி
கூற்றுக்கிரையெனப் பின்மாயும்- பல
வேடிக்கை மனிதரைப் போலே- நான்
வீழ்வேன் என்று நினைத்தாயோ?"

நாற்பதாண்டு பாரதி கலாமன்றத்துக்கு வயது
பாரதிக்கு வயது முப்பத்தொன்பது,
பாரதி காலம் ஆகி வயது எண்பத்திரண்டு
செப்ரம்பர் 11-1921
'தனிமனிதனுக்கு உணவில்லையெனில்
இந்த ஜகத்தினையே அழித்திடுவோம்'
செப்ரம்பர் 11-2001
நியூயோர்க் கூர்க்கோபுரம் புரண்டு
ஆண்டு தினம் இரண்டு இன்று!
இந்நாளில்;
'இரண்டாயிரம் ஆண்டுப் பழையசுமை எங்களுக்குச்'
சொல்லி வைத்த
மூத்த பெரும் கவிமுருகையன் தலைமைசெய்,
வடக்கிருந்து தவமியற்றி
மீள்வித்து எமைக்கொணர்ந்த சோ.ப.,
கல்வயல் உழுது
சொல் வயல் கவிதந்த குமாரசாமி அவர்க்கு,
அப்படியே இரு, கவி தந்த அழ. பகீரதனுக்கு
புதுமைப்பெண் கவி கண்ணாவுக்கு
மாசபைக்கு என் வணக்கம்.

**இருவேறு உலகங்கள்**

பண்பாடு இரண்டு, பாரில் இங்கு உண்டு!
என்பாடு என்ன, இதில் இரண்டில் ஒன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பட்டகாலே படும் கெட்ட குடியே கெடும்' - என்ற
பாட்டன் பரம்பரையின் மீதிப்பேர் எனது!
தேட்டமென நம்பி நாம் தேடியது எங்கள் முதிசமாய்
பாட்டமாய் வாய்த்தது நோயும்- வறுமையும்- அறியாமையும்!

உழுதவர்நாம்! கடலோடி உழைத்தவர் நாம்!
மரமேறிகள் நாம்! உரமான தொழில் அத்தனையும் செய்து
செத்தவர் நாம்! செத்துச் செத்துச் சீவனோடிருந்தவர் நாம்
சீவனோபாயத்தைத் தொலைத்தவர் நாம்!

பண்பாடு இதில் என்ன? என்பாடு எவர்பாடு!
எனக்கென்று என்னபாடு? என்பாடு பிறர்பாடு!
நான் இல்லை! எனக்கென்று எதுவுமில்லை!
நான் அவர்களால் ஆக்கப்பட்டிருக்கிறேன்!

அவர்கள் யார்! அவர்கள் ஆண்டகைகள்!
ஆக்கினைகள் விளைப்போர்!
எங்கள் ஆளுமை அவர்கள்தாமே!
'என் கடன் பணி செய்வதல்லால்
வேறொன்றறியேன் பராபரமே'

எஜமானாய் வந்து என்னை அடிமைகொண்டோர் அவர்கள்!
பிரபுவாய் வந்து என்னை இரட்சித்தவர்கள் அவர்கள்
அரசனாய் வந்து அவர் வீதிவலம்வர தேரிழுத்தவர்கள் நாங்கள்!
எங்கள் நெல்விளைச்சல் வயல்களிலே
குதிரைச் சவாரி செய்து சவுக்கைவீசி மகிழ்ந்தபோது
புழுவாய் துடித்தபடி கைதொழுதவர்கள் நாங்கள்!
'கருவிலே திரு வாய்த்தவர்கள் அவர்கள்!
பிறப்பிலே நந்தனாய் பிறந்தவர்கள் நாங்கள்!
எங்களை அடிமைகொள் சீட்டு- அவர்களிடம்
நாம் பிறப்பதற்கு முன்பே கொடுக்கப்பட்டுள்ளது

ஆதலால் அவர்களால் ஆட்கொள்ளப்படுவதற்கென்றே
இப்பூதலந்தன்னில் பல இலட்சக்கடனோடு பிறந்துழலும்படி
பிறப்பதற்கு முன்பே எம் பெற்றோர் சபிக்கப்பட்டுள்ளனர்!
ஆமென்! அரகரமகாதேவா!

எங்களில் அக்கறை கொண்ட அறிஞர்கள்
அவர்கள் பண்பாடு பேணுதற்காய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் ஊழ்வினைகளை உய்த்துணர்ந்தெழுதினர்
'பொருளிலார்க்கு இவ்வுலகமில்லை'
'பணமிலாதார் பிணம்'
'பணமெனில் பிணமும் வாய் திறக்கும்'
'இல்லானை இல்லாள் வேண்டாள்
ஈன்றெடுத்த தாய் வேண்டாள்- செல்லாது
அவன் வாய்ச்சொல்'

'காசேதான் கடவுளடா- அந்தக் கடவுளுக்கும் இது தெரியுமப்பா'
'அண்ணன் என்னடா தம்பி என்னடா அவசரமான உலகத்திலே'
'பணம் பந்தியிலே குணம் குப்பையிலே'
'ஒரு நாள் கழிந்தது' - புதுமைப்பித்தன் சொன்னது!

பணம் உள்ளவன் - இல்லாதவன் என்ற பிளவில்
உள்ளவன் உலகை ஆளுகிறான்
இல்லாதவன் கண்ணீரில் - வியர்வையில் - இரத்தத்தில் மூழ்குகிறான்
உள்ளவன் ஆதிக்கம் உலகெலாம் பரவும் வகையில்
நல்லதெனும் நிலையை உண்டுபண்ணுதலால்
பொய்- புளுகு- களவு- கபடம்- கொலை- கொள்ளையெனும்
பொல்லாப் பழக்கமெலாம் வழக்கமாய் ஆகியதால்
ஊரெல்லாம் பண்பாடாய் செழிக்குதே - ஐயகோ!
என் செயலெல்லாம் நின் செயலல்லால்
வேறொன்றறியேன் பராபரமே!,

இருவேறு உலகங்கள் இங்கு உள்ளன
எங்களில் எத்தனை பேருக்கு இதுவெலாம் தெரியும்?
ஒவ்வொரு மனிதரிலும் ஒவ்வொரு மதத்திலும்
ஒவ்வொரு மொழியிலும் ஒவ்வொரு இனத்திலும்
ஒவ்வொரு குடும்பத்திலும் இவ்வாறெல்லாம்
இருவேறுலங்கங்களாய் பிளவுண்டுள்ளது!
அதன் பேர் வர்க்கம்!

உள்ளோரின் உலகம்      எல்லோரின் அங்கீகாரத்துக்குமுரியது
எல்லோரின் அடையாளத்துக்குமுரியது
எல்லோரின் கௌரவத்துக்குமுரியது
எல்லோரின் பெருமைக்குமுரியது
எல்லோரின் பாராட்டுக்குமுரியது
எல்லோரின் வரவேற்புக்குமுரியது
எல்லோரின் பண்பாட்டுக்குமுரியது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாரின் உலகம்

எல்லோரின் எள்ளலுக்குமுரியது
எல்லோரின் நையாண்டிக்குமுரியது
ஆரெவரென அடையாளம் அற்றது
எல்லோரின் அவமானத்துக்குரியது
எல்லோரின் அலட்சியத்துக்குரியது
எல்லோரின் வெறுப்புக்குரியது
எல்லோரின் சபைக்குமுதவாதது
எல்லோராலும் விரட்டப்படுவது

**எங்கள் தமிழுலகும் போரின் வடுக்களும்**

கொக்குவில் கலியாண வீடொன்றில்
வீடியோவில் விலாசம் பதிவதற்காய்
கியூவில் நின்று அறுகரிசி போட்டு
கமறாமுன் பல்லிளித்து, மாப்பிளைக்கு
காசும் ஃபான்சிப் பொருளுமாய் நீட்டி
கைகொடுத்து பண்பாட்டைக் காவாந்து பண்ணி
பலபத்துக் கறியோடு பாயாசம் முந்திரிவத்தலும் சேர்த்து
சர்க்கரை வியாதிக்குச் சரியாய் ஆள்முடிய
வண்டியும் வெடிக்க;
ஃபமிலிப்போட்டோவுக்காய் போனேன்- போஸ்கொடுக்க!

போர் விளைத்த பூமியில் என் சோதரியும் வந்தாள் போஸ்கொடுக்க
'நல்ல கருமத்தில் நில்லாதை
பிள்ளை நீ அங்காலை அகல்' என்று,
புல்லன் ஒருவன் புகன்றான் புதுமொழி!
உண்ணாணை அவள் செய்த பாவமென்ன? ஐயகோ!
ஷெல்வீச்சில் முழுக்கையும் தானிழந்த பாவியவள்!
எங்களுக்குச் சரிப்பட்டு வராது!
சத்தியமாய் எங்கடை பண்பாடு காக்க!

**கோவிலும் சாதியும்**

ஊர்க் கோயில் கேணியில்
சுற்றி முள்கம்பி வேலி போட்டிருக்கு
பண்பாடு காப்பதற்காய்!
கண்ட நிண்ட சாதியளும் தீர்த்தமாடிப்
பாவம் விளையாமல் தடுப்பதற்கு!
'பண்பாட்டின் பேரால் பலசோலி எங்களுக்கு!'
இப்போதெல்லாம் ஊர்க் கோயில்களிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி காவுதற்குத் 'தொண்டர்சபை' பொறித்ததொரு துண்டை
கையிலே கட்டுதல் சமயக் கடன் காணீர்!
சண்டிலிப்பாய் அம்மன் முன்
வெளிநாட்டாரொருவர் கண்டபடி சாமியைத் தூக்கினாரென்ற
சண்டித்தனமாய் விளைந்ததைத் தடுக்கப்
பெரும் பக்தகோடிகள் மெய்யோடு வாய் பொத்தி
கண்டிப்பாய் அமுல்படுத்த
'தொண்டர் சபை' அங்கீகாரம் இரண்டு விஷயத்தில்
தெண்டிமை பண்ணாமல் தீர்மானங் கொண்டு,
1. சாதி சனம் நன்றா? 2. காசுபணம் உண்டா?
இரண்டிலும் பாஸ் எண்டால் கையில் கட்டும்
பாஸ் துண்டு கிட்டும்!
கடவுள் விக்கிரம் தோளில் ஏறும்!
அரோகராச்சத்தம் வானைப்பிளக்கும்!
'பண்பாட்டின் பேரால் பலசோலி எங்களுக்கு'

**நிலமும் ஒழுக்கமும்**

பனி படர்ந்த குளிர் நாட்டில்
பிரான்சில் கனடாவில்
ஜேர்மனியில் சுவிசில்
பார்தேசமெங்கும்
தனிப்பெருங் கோயில்கள் எழுப்பி
மேல் சேட், கோட் களற்றி
சரிகை வேட்டி சால்வை கட்டி
பேருவகை பொங்கப் பெருந்தேர் தானிழுத்து
டொலர் பவுண்சில் தேங்காய் இறக்கித்
தெருவெல்லாம் அடித்துச் சிதற
நகரசபை குப்பைலொறி அள்ளி ஏற்ற
அரோகராப்பக்தி பனி முகட்டை முட்ட
'பண்பாட்டின் பேரால் பலசோலி எங்களுக்கு'

குஷ்புவுக்குக் கோவில்
இராமருக்கும் கோவில்
காவியமெழுதிய கம்பனும் கடவுள்
கூடவந்த குரங்குக்கும் கோவில்
ஆஞ்சநேயருக்கு தெகிவளை காலிவீதியில் தேரிழுக்க
றம்பொடையில் சிலை வைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதனாமடத்தில் மலையில் குரங்கு
கோவில் இல்லா ஊரில்... மன்னிக்கவும்
குரங்கில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்
பெருமிந்தியக் கண்டத்திலிருந்து
குரங்குகள் வருங்காலத்தில்
இலங்கை இந்தியாவினுள்ளடக்க மென்று
இங்கு பாயும் கவனம்! ஜகத்தீர்!

**எல்லாம் உலகமயம்**

காலை எழுந்தவுடன் ரியூசன்- நல்லாய்
காவிச்செல்லும் முதுகுப்பாரம்
மாலை முழுவதும் வெறும் ரியூசன்- என்று
கிழடு தட்டிக் கொள் பாப்பா!

காசு நீ தேடு பாப்பா!
கூழ் கஞ்சி குடியாதே பாப்பா!
கொக்கோ கோலாவை விழுங்கு நீ பாப்பா!
கெதியிலே குளோசாகு பாப்பா!

அக்கம்பக்கம் பாராதே பாப்பா!
ஆரோடும் பேசாதே பாப்பா!
ரிவியே நமக்குத் துணை பாப்பா!
அன்ராவை மறந்துவிடு பாப்பா1
அன்ரனாவை மாத்திமாத்தி பாராய் நீ பாப்பா?
ஆள் முடிஞ்சாலும் பரவாயில்லைப் பாப்பா

அம்மா தம்பி அப்பாவுடன் பாப்பா
தொல்லை தவிர்க்க நீ பாப்பா
தொலைக்காட்சி முன் குந்துவாய் பாப்பா!
அம்மாவும் பாவந்தானே பாப்பா!
சோறு தண்ணி தேவையில்லைப் பாப்பா!
எல்லோருமாயிருந்து நாங்கள்
அந்நியரின் ஆகாசத்தைப் பார்ப்போமே பாப்பா!
கொம்பியூட்டர் நல்லதுணை பாப்பா!- அது
அரிசி கொண்டு வந்து தரும் பாப்பா!
உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்யோம்!- ஐயோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டி கட்டி ஆள்முடிய ஆரிடம் செல்வோம்!
கொம்பியூட்டர் கொம்பியூட்டர் எங்கள் கோயில்
சின்னமேளம் அங்கு இல்லை பாப்பா!
இன்ரநெற் சற்றினிலே பாப்பா
சினிமாச் சல்லாபம் செய்வோமே பாப்பா!
வாலிபப் பருவமினி வாராது!

நாம் போய்சும் கேள்சும் ஒன்றாய்
இளிச்சவாயர் ஆகிப்போவோம் பாப்பா!
'பாய்ஸ்' படம் பிச்சு வாங்குது!
வோய்ஸ் எல்லாம் இங்கிலீ...சு!
இசையில் மொழிஞ்சு தள்ளுது

தமிழுக்கு உயிர்விட்டு மென்ன?- எங்கள்
வாயிலிருந்து விரட்டிவிடு தமிழை!- அது எங்கள்
வாழ்வுக்கு நல்லதடி பாப்பா!

**வேறு**

கல்குலேற்றர் கணக்குச் செய்யும்
கொம்பியூட்டர் சிந்தனை செய்யும்
கால்கள் நடக்காமல் படிகள் ஓடும்
கைகள் படாமல் கதவுகள் திறக்கும்
மரங்களில் தாவிய குரங்குகள்
நிலத்தில் வந்து உழைத்ததும்
முன்னங்கால்கள்-
கைகளாய் மாற்றம் கண்டன!
மூளை பெற்றது வளர்ச்சி!
வால்கள் மறைந்தன தேய்ந்து!
அப்படியென்றால் இனிமேல்
தேவையற்ற உடல் உறுப்புகள்
கைகள்- கால்கள்- மூளை இல்லா மனிதராய்
நாங்கள் மூழ்கித்தான் போவோமா? மனிதா!
ஓப்போடு! எல்லோரும் ஒன்றாய் அரோகராப்போடு!

**தமிழும் நாமும்**

சிங்களம் ஒரு மொழி திணிப்பது கண்டு
நண்டெழுத்தென்று நக்கல் பண்ணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரண்டெழுந்து எம் உயிரைக் கொடுத்தோம்
மொழியைக் காக்க! மொழியைக் காக்க

தம்பி குடும்பம் கனடாவிலிருந்து வந்தது காணக்கதைக்க
சமர் ஹொலிடே சாமான் மலிவாய் வேண்டவும்
சுற்றுலாவாய் மீளவும் என்று வந்தனர் வடிவாய் கதைக்க!
'பெடியப்பா' என்றான் பெறாமகன்
'சோடும் படுப்பும்' தமிழில் மூன்று சொற்கள் உதிர்த்தான்!
ஆஹா என்று பரவசமடைந்தேன்!
ஆஹா! பண்பாடு உயர்ந்திடப்பாடு!

தமிழ் எங்கள் உயிருக்கு நேர் அல்ல
மயிருக்கு நேர் என்று மழுப்பு!
மொட்டையடி! முழுக்குப் போடு!
பிரஞ்சு எங்கள் தமிழ்
டொச் எங்கள் தமிழ்
டெனிஷ் எங்கள் தமிழ்
இற்றலி எங்கள் தமிழ்
இனி எல்லாம் தமிழ்! எங்குந் தமிழ்!
உலகம் எதிலுந்தமிழ்!

ஆஹா! ஆஹா! ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம் என்று!
தமிழுக்காய் நாம் போர் களம் காண்போம்!
சந்நதிக் கட்டுத் தேர் சரிந்தது
நல்ல சகுனம் என்று
வெளிநாட்டார் செல்வம் செழிக்க
வீஷா கிடைக்க
சென்றோர் மீளாதிருக்க
ஹலோ என்றதும் கிலோவாய் பவுண் மிதக்க
பண்பாடு உயர்ந்திடப்பாடு!

**(11.09.2003ல் 'இருபாலை பாரதி கலாமன்றத்தின் 40வது ஆண்டுவிழாவும் பாரதி நினைவு விழாவும்' கொண்டாடப்பட்ட கவியரங்கில் வாசிக்கப்பட்டது)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2

# கனவு மெய்ப்பட வேண்டும்

கனவு மெய்ப்பட வேண்டும்
நடன சிகாமணி பாடென்றார்
பணிந்தேன் அவர்தாள் நினைந்து

கனவுதானே நாளெலாம்
படுக்கையைச் சுத்திச்சுத்திச் சுருண்டு போர்த்தி
பகல் வாராவாறு கண்களை இறுக்கி மூடி
இரவிரவாய் நான் காணுங் கனாத்தானே!
கண்டதெலாம் நனவாக நடைபெறுதல் வேண்டுமென
கும்பிடின் போதும், பாட்டொன்று பிறக்கும்
பிறகென்ன, பேசாதிருந்தேன்

எனக்கெனினும் ஏது நடப்பினும்
இன்பமெனிலும் ஏதும் இடைஞ்சலெனிலும்
கனவைச் சுவைக்கச் சுவைக்க காணுதல் சுகம் என்பேன்

கவலையெனில் கனவில் அழுதல் ஒரு சுகம்
அதிலும் விக்கி விக்கி அழுதல் பெருஞ்சுகம்
சிரித்தல் கைகொட்டி வாய்விட்டுச் சிரித்தல்
ஆனானப்பட்ட ஆளாரெண்டாலும் ஏசுதல், சிலிர்த்தல்
அருமையாய் வாய்த்ததொரு கனாக்காணும் சுதந்திரம்

கனாக்காணும் என் சுதந்திரமீதில்
கைவைத்தல் ஆருக்குமினி ஏலாதெனுந் தைரியத்தில்
நான் நானாய் இருப்பேன்
நாற்றுமேடை நன் நிலமாய்க் கிடப்பேன்

சின்னனிலே யொருநாள்
நடையர் கடைச் சர்க்கரை இனிப்புப் போத்தலைப் பார்த்து
வாயூறி யூறி வலம் வந்தேன்
வாய்க்கவில்லை இனிப்பு
கண்ணுறக்கம் வரக் கனாக் கண்டேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிப்புப் போத்திலை அப்படியே சரித்துக்
கட்டிய சாரச் சண்டிக் கட்டிலே கொட்டி
யாருமிலா நேரத்தில்
காளி கோயில் இலுப்பை மரத்தடியில் தனித்திருந்து
சர்க்கரை இனிப்பு வெறுக்க வெறுக்கத் தின்று தீர்த்தேன்
மிஞ்சியதை நாளைக்கு வந்து சுவைக்கவென
மரத்தாள் பேப்பரில் சுற்றி
இலுப்பை மர வேரடி மண்ணில் தாட்டு வைத்தேன்
தாட்டது தாட்டதுதான்- மீள நான் இனிப்புத் தொடவேயில்லை.

கனாக் கண்ட நாள்முதலாய்
இருபது வருடமாய் நான்
இனிப்பை வெறுத்தேன் பாயாசம் சர்க்கரை சீனி தொலைத்தேன்
தேனீர் கோப்பியென எதுவுமின்றியென் இளமையைக் கழித்தேன்
நடையர் கடை இனிப்பும் நான் கண்ட கனவும்
மெய்ப்பட்டதெனக்கு!
நிச்சயமாய் கனவு மெய்ப்படவேண்டும் எவர்க்கும்

காசில்லையெனில் காசுமரம் உலுப்பக் காசுகொட்டும்
மண்ணைக் கிளறக் கிளறக் காசாய் முளைக்கும்
என்றாலும் இன்றுவரை நேரில் நான் பேயைக் காணவில்லை
பெருங்கடவுளரைக் கூடக் கண்டதுமில்லை
அது அது அந்தந்தக் கணங்களில் பிறந்தால் கைகூடும்
என்பார் பழம் பெரியர்

என்குறைதீர் மருந்து கனாவெனும் பெரு விருந்து
பேய் எனைக் கலைக்க ஓடுதல் நடக்கும்
கடவுளை கண்டு கைகுலுக்கி தோளில் கைபோட்டு
கலந்துபேசிக் களிப்பேன்!
ஆஹா என்ன சுகம்! கனாக் காணும் அந்த யோகம்
சாமானியர் எமக்கு வாய்த்த பெரும் போகம் இதுவென்பேன்

கனவு காணுதல் ஓர் தனிக் கலை
கதவு தட்டினாலும் காலை தட்டியெவர் எழுப்பினாலும்
போர்வையை விலக்கியெழுமாறு யார் எனைப் புறுபுறுத்தாலும்
ரெலிபோன் மணி ஒப்பாரி வைத்துக் குளறினாலும்
கனவு கலையும் படியாய் ஒரு கணமும் எழும்பேன் நான்
கனவு காணுதல் ஓர் கலையென்பேன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாகும் அது நிசம் என்பேன்
என்னயலில் அழகரெனும் அறிவாளி வாழ்கிறார்
என்னலுவலகத்தில் கதிர் எனும்
பஞ்சாங்கப் பலன்புரியும் நண்பருமுளர்
அவர்களைக் காணுகையில் கண்ட கனாச் சொலிப்
பலனும் கேட்பேன் பயன் சொல்வார்
பொழுதொன்று போகும் பழுதின்றி!

***

முன்னாளில் ஆச்சியும் பீட்டி பெத்தாச்சியும்
கனவுப்பலன் சொல்லிக் கதைப்பதை
என் நாடியைக் கையிரண்டால் தாங்கியபடி கேட்டிருப்பேன்
விளங்கவில்லையெனில் அவர்தம் நாடியைத்
தட்டித் தடவி கேட்பேன்
பொக்கை வாயால் புதிது புதிதாகப் புகல்வார் பெத்தாச்சி
கனவுகள் பலிக்குமென்பார்;
பல்லு விழின் முடிவெட்டின் சகோதர இழப்பென்பார்
பால், தயிர், சோறு காணின் செல்வம் வருமென்பர்
கலியாண வீடென கனவுவரின் சாவோ இழப்போ வருமென்பர்
செத்த வீடாய் காண்கையில் நன்மையென்பார்
பூ எனில் நன்மையெனப் பலன் செய்வார்
ஆமி, பொலீஸ் எனில் கட்டாயம் யமன் வருவானென்பார்
கெட்ட கனவெனில் நன்மையும்
நல்ல கனவெனில் தீமையும் வருமெனப் பொதுவாய் சொல்வர்

***

அயலார் அழகர் சொல்வார்
முன்பொருநாள் தான் கண்ட கனவு பலித்ததென்றார்
மறுநாள் தான் கனவில் கண்டது அப்படியே நடந்ததென்பார்
தன் நண்பர் ஒருவர் மரணமடையத் தான் கனவு கண்டதென்றும்
அப்போது அவரை வளத்திய கட்டிலும்
எரிந்த குத்துவிளக்கும்
மனைவி நின்றழுத இடமும்
மரணச் செய்தியை தன்வீட்டுப் படலையில் பெல் அடித்துச் சொன்ன பொடியனும்
மறுநாள் அது அது அப்படியே நடந்ததென்றார்
தனக்கது இன்னும் புரியாத சங்கதி என்பார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிசயமென்று திகைப்பார்
செத்த வீடெனில் நல்லது நடக்குமெனும்
பலன் இங்கே பிழைக்குதே என்பேன்1

"இவனென்ன சுத்தப் பேயனாய் கிடக்குது
ஆள் வலு விண்ணன் எண்டல்லோ கவிதை பாடவிட்டன்
உதுகும் ஒரு கதையோ? வெறும் விசரன், விளலலம்புகிறான்"
என்றிங்கே நடனம் பக்கத்தில் புறுபுறுப்பது கேட்கிறது
'பாரதியின் பிறந்தநாள் பெருவிழாக் கவியரங்கு'
எனக் கவலை கொள் நெஞ்செனக்கு புரிகிறது

ஆரப்பா நான், சாமான்யன்
சத்தியமாய் கவியறியேன்
வாயில் வந்ததெலாம் வாச்சபடி வாசிக்கும்
ஆரப்பா நான், சாமான்யன்
சபை பொறுக்க, குறை பொறுக்க!
பாரதி பாடிய பாடல் தேடினேன்
கவிபடிக்க, வெறும் கவிப்பாமரன் நான்

"மனதில் உறுதி வேண்டும்-
வாக்கினிலே இனிமை வேண்டும்
நினைவு நல்லது வேண்டும்
நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்
கனவு மெய்ப்பட வேண்டும்...
மண் பயனுற வேண்டும்
வானகமிங்கு தென்பட வேண்டும்
உண்மை நின்றிட வேண்டும்"

கனவு மெய்ப்பட வேண்டுமெனில்
வானகமிங்கு தென்படவேண்டும்
உண்மை யொருபோதும சாய்தல் கூடாது
தானோய்ந்து படுத்தல் பொருந்தாது
உண்மை எந்நாளும் நின்றிட வேண்டும்
எனும் பாரதி கட்டளை கேட்டேன்
கவிப்பொருள் தாவெனக் கெஞ்சினேன்
பாரதி பாவியேன் நிலைகண்டு நொந்தான்
தேவாதி தேவா பாடு பாடெனத் தன் பாட்டை விட்டான்

"கனவென்றும் நனவென்றும் உண்டோ
காண்பது காட்சியல்லாற் பிறிதாமோ?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு மனையிலிருப்பது வானம்- அந்த
வானத்தில் வந்தவர் தேவர், முனிவர்
நினைவது செய்கை அறிவீர்
எந்த நேரத்துந் தேவர்கள் காப்பது வையம்
வினவிற் பொருள் விளங்காது- அக
விழியைத் திறந்திடில் விண்ணிங்கு தோன்றும்"

பாரதி சொன்னபின் துணிந்தேன்
சபை பணிந்தேன், கவிபாட எழுந்தேன்
என் வீடே விண்ணகமானது
நானே தேவன்; என் மனைவி மக்கள் முனிவர் தேவர்

"விண் மட்டும் கடவுளன்று; மண்ணும் அஃதே"
"நலிவுமில்லை, சாவுமில்லை கேளீர், கேளீர்
"கூடித் தொழில் புரிதல் வேண்டும்"
"பொதுப் பெரும்பயன் கருதித் தஞ்சிறுபயனை
வேடிக்கை போலுதறித் தள்ளிப் பொது
வெற்றியினை நாடுபவர் மேன்மை பெறுவார்"
"இன்று புதிதாய் பிறந்தோம்"
"மேலும் மேலும் மேன் மேலும்
புதிய காற்றெம்முள் வந்து
மேன் மேலும் புதிய உயிர்விளைத்தல் கண்டீர்"
"எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் நிறை- நாம்
எல்லோரும் இந்நாட்டு மன்னர்"
"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு- நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு"

மந்திரம் பாரதி மந்திரம்
அந்தரப்படும் மானுடர்தம்
வெந்த கொடுமைகள் நீங்கிட
சொந்தமாய் கனாக் காண்போன்- பிறர்
நொந்திடும் உலகினை ஒழிக்கவே!

மந்திரக்கோல் எங்கள் செங்கோல்
மண்டபம் மாளிகையெல்லாம்
அந்தரத்தில் பறந்தே அது
ஆராரோ கையெலாம் பட்டே
பார் ஆளும் மன்றமே அல்லோல கல்லோலம்
ஐயகோ, ஆர் எமைக் காப்பார்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரப்பழிய நீர் ஓடும்
நீரோட நெல்லழியும்
நெல்லழியக் குடிமுழுகும்
குடி முழுகக் கோல் உயரும்
கோன் சிறை செல்ல செங்கோல் மறையும்
செங்கோல் மறையச் செருப்பரசாளும்
செருப்பரசாள இந்திய நடிகன் வருவான்
குண்டெறி வீழக் குளப்படி கூடும்
இரண்டொரு சனஞ் சாகும்
புத்தஞ் சரணங் கச்சாமி
தம்மம் சரணங் கச்சாமி

***

நீதிபதியார் தலைபோக விலை ஆளுக்கு நாற்பதாயிரம்
சாதாரணர் சாகச் சல்லி யேதுமில்லை
காளியின் கடைக்கண் பார்வை பட்டதால்
ஆஹா வென்றெழுந்தது சோவியத் புரட்சி

மாகாளி வாசலில் நாம் தவமிருக்க
இன்னுமேன் 'கடைக்கண் பார்வை' எமக்கில்லை
மாபாதகர் ஆனோமோ?

குந்தினேன் குளறினேன் குப்புறவிழுந்து
புரண்டேன் ஓலமிட்டேன்
ஓகோவென்றெழுந்தது ஓர் அசரீரி! வானவெளியெங்கும்
எங்கும் அமைதி, அப்படியோர் நிசப்தம்

காளியவள் எனை நோக்கி வந்தாள்
அவளை நான் நோக்க- நாமிருவர் தாம் நோக்க
அக்கினிக் குஞ்சொன்று பிறந்தது கண்டேன்

சூரர் அசுரர் அரக்கர் அரக்கியர்
ஆட்சியும் சூழ்ச்சியும் அழியக் கண்டேன்
அந்தரத்தில் தொங்கிய ஆகாயத்து நட்சத்திரமெல்லாம்
வீதியெலாம் கோலம் போட்டெனை அழைக்க நான் நடந்தேன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானே தேவன்
எனைச் சூழப்பதின்மர்
அவரைச் சூழ நூற்றுவர்
விரி சுற்றாய் விரிய விரியப்
பல்லாயிரமாயிரமாய் படையினர் நடைபயில்வர்
ஆளுவர் உழைப்பாளராய் உருவேறியோர்
மாறுவர், மாற்றம் மட்டுமே மாறா நியதியெனச்
சூளுவர் ஒன்றாக மொய்த்துமே!

கூட்டலும் பெருக்கலும் எங்கள் குலமானது
பிரித்தலும் கழித்தலும் பேயர் விலங்கானது

மாவலி நதி வந்து பாயும்
மாணிக்க கங்கை அதில் தோயும்
கனகராயன் ஆறோடு சேரும்
இரணைமடுக்குளம் நிரம்பி வழியும்
தொண்டமானாறு அங்கு தொடரும்
கீரிமலையேறிச் சிவனொளிபாதம் சேர்வோம்

கதிர்காமமும் தலதாவும் நல்லூரும்
மடுமாதாவும் வற்றாப்பளையம்மனும்
பொன்னாலை வரதராசப் பெருமானும்
பாலாவிக் கேதிச்சரத்தானும்
கோணமாமலையமர்ந்து
கோலோச்சும் காலமதில் கண்டேன்
குச்சுக் குடிசைக்குள் கொலுவிருக்க
குடிமக்கள் சொன்னபடி குடியாட்சி கண்டேன்!

பிரான்சியப் புரட்சியின் 'கிலற்றின் கத்தியே'
எங்கள் தூக்குமரத்தின்
மரண தண்டனையைக் கூறிற்று
மீண்டும் மரண தண்டனை அவர்க்கே ஆயிற்று

இயற்கையோடு இணைந்தேன் மணந்தேன்
புதிதாய்ப் பிறந்தேன்
பத்தேக்கர் காணியில் செம்மண் சுவர் எழுப்பி
சாணகத்தால் மெழுகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணில் உறங்கினேன்!
பொன்னுலகம் மண்ணில் காணும்வரை

பாலும் பசுவும் ஆடும் குட்டியும்
வேளைக்குக் கூவிடச் சேவலும்
நாயும் பூனையும் முட்டையும் கோழியும்
நானும் மனைவியும் மக்களுமாய் இணைந்தோம்

வாழையும் கமுகும் வற்றாழையும்
தென்னையும் வரகும் சாமையும் பயறும்
உழுந்துமெனப் பயிர்செய எழுந்தோம்

சாணம் குப்பை ஆட்டுப்புழுக்கை
காணும் கழிவெலாம் கூட்டிச்சேர்த்து
உயிர் வாயுப் (Bio gas) பொறியமைது
இயற்கை வாயுவில் கறிசமைத்து
தாளித்துப் பொரித்துச் சமையல் உண்டோம்

சூரியக் கலத்தில் (சோலர்பவர்) நெருப்பை எரித்து
விளக்கையேற்றி மின்சாரம் செய்வோம்
மூலிகைப் பண்ணையில் பிராணனை உள்ளிழுத்து
ஓம்... ஓம்... ஓம் எனச் சுவாசம் கொள்வோம்

உறவெலாம் கூடும், உலகெலாம் பாடும்
இயற்கையோடு வாழும் இன்பமே
எங்கள் கனா! இன்பக்கனா!
அக்கனவு மெய்ப்பட வேண்டும்

*(இலங்கை மக்கள் பொதுப் பணி மன்றத்தினரால் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் 12.12.2004ம் திகதி 'பாரதி- 122வது பிறந்த தின நினைவாக' நடைபெற்ற பெருவிழா கவியரங்கில் பாடப்பட்டது)*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3

# தருமம் மறுபடி வெல்லும்

கவியரங்கில்
பங்குபற்றுவோரெல்லாம்
கவிச்சுடர், கவிஞரென
சங்கு முழங்கு கவிபாட
வந்திங்கு முன்னிற்க
இங்குற்றேன் யானென்று
திரு... திருவென்று
எங்கும் முளி பிதுங்கி
திகைக்கின்றேன் யான்
என் செய்வேன்?

திரு. சோ. தேவராஜாவென்று
நிகழ்ச்சி நிரலில்
அச்சிட்ட தோரணையில்
திரு... திருவென திகைக்கிறேன்!
என் செய்வேன் பாவம் யான்!
திரு. சோ. தேவராஜா நான்தானே!

புண்ணியங் கிடைக்கும்
பொறுத்திருந்து கேட்பது
பொது மக்கள் உங்கள் கடன்!
என்கவியைப் பாடி முடிப்பதே
கவியாக!

கட்டுண்டோம் பொறுத்திருப்போம்
காலம் மாறும் என்று
பாட்டுப்பாடிப் போய்விட்ட பாரதியே
அம்மட்டும் போதுமே! நாம் பேசாதிருந்திடலாம்!

அதன் பின்னால் ஏன்தான்
'தருமம் மறுபடி வெல்லும்' என்று
நீதிபாடி நீ சென்றாய் கோமகனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ தமிழ்ப்பா பாடி நீள் துயில் கொண்டு விட்டாய்!
எனையெல்லாம் தமிழ்ச்சங்க அவைமுன்
நிற்பாட்டி நீ பாடு பாட்டென்று
நிறு தட்டமாய் சொல்லிவிட்டார்

யார் கேட்டால் தானென்ன
கேட்காவிட்டால் தானென்ன
பார் கேட்கப் பாடுகிறேன்- நான்
பார் கேட்கப் பாடுகிறேன்

கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடுமெனச் சொன்னால்
நானாய்- வம்பாய் வந்து வீழ்ந்த கவியரங்கமீதில்
கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் கட்டையன் நானும்
கட்டைத்தாணும் கவிபாடித் தட்டுங்கள் கையையென்று
உங்களைத் தடவி நானும் கொடுக்கிறேன் கவிதைமொழி
குப்பையெனில் விலக்குங்கள்!
குண்டுமணியெனில் பொறுக்குங்கள்

****

தருமம் மறுபடி வெல்லும்- எனப்
பாரதி கவிதை சொல்லும்
வருமொரு கேடுடன் துள்ளும்- அந்நியர்
உருமாறித் தனியார் மயமெனச் செல்லும்
இறைமை மிகு நாடே! என்னருமைத் தாய்நாடே!

ஒரு குளி நிலந்தன்னும் எங்களுக்கு மிஞ்சாதென
பல்தேசியக் கொம்பனிகள்
வல்லூறுகளாய் மாறி
டைனோசஸ் விலங்குகளாய்- நேற்றைய நாள்
வரவு செலவுத் திட்டத்தின் வாசல் தானுடைத்து
உறவு கொள்ள வந்திட்டார்
ஊரெல்லாம் சீரழிய

ஈழத்திருநாடே, என்னருமைத் தாய் நாடே
இருகரம் கூப்புகின்றேன் வணக்கம் அம்மா!
வாழவொரு காலம் வகைசொல்லும் நேரம்வரும்
தருமம் மறுபடி வெல்லும் எனப் பாரதி கவிதை சொல்லும்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆச்சி தொழுத நிலம்- எங்கள்
அப்பு உழுத நிலம்
தாச்சி மறித்த நிலம்
வீச்சுக் கவிதைப் பலம்- நாம்
வீறுகொண்டெழுந்த நிலம்
மூச்சுப் பிடித்தென் முழுமதியும் கவி எழுதும்
முழுமதியைத் தொட்டவனின் முழுச் சுற்றத்தின்
ஊற்றுப் பேனா யான்!

தாலாட்டுப் பாடவா! ஒப்பாரி பாடவா!
கோலாட்டம் பாடவா, கும்மியொன்றாய் பாடவா!
வாலாட்டுவோரின் கதியை யான் பாடவா?
கதிர்காமப் பெருமானே!

அருண்ட கிரிநாதர் எனுமோர் பெருநாதர்
உருண்டையெனும் 'புதிய பூமி'ப் பத்திரிகைக் கருளிய
திருப்புகழ்ப் பாட்டினிலே:
பெரும்பான்மை இனவாதர் பணியாளாய் உயர்வாகி
அரசான பீ. ஏ. யின் அதிகாரம் பறிபோயும்
பரிவாரம் பல கார்கள் படை காவல் பறிபோகா
கரியானைக் கினியோனே கதிர்காம(ர்)ப் பெருமானே!

மொட்டையன் யானென்றாலும் - சில
கட்டை மயிர்தான் பறித்துப்பிடித்து
வட்டாய் உச்சி மண்டையில் முறுக்கி
நீட்டி மடக்கிக் குறுக்கிச் - சில
மயிர் நான் காத்து
உயிர் போயினும்
மயிர் நீக்கா
கவரிமான் மானஸ்தன்
நானென்று கவிபாட தானெழுந்தேன் பார்!

'கவிபாட எழுந்தேன்' என்றேன்
'கவிதை மொழி கொட்டுகிறேன்' என்றேன்
'தட்டுங்கள் கை' யென்றேன்
முட்டுப்பட்டும் கவிதையொன்றின்னும்
கைவரவில்லையே யார் குற்றம்?
****



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டை மயிரெல்லாம்
அண்ட சராசரமெங்கும்
நீண்டு நிலைத்த பெருங் கூந்தலாய்
கடலாய் நதியாய் அலையாய்
தாண்டு சமுத்திரப் பெருவெளியெங்கும்
முகிலாய் மலையாய் வானமாய்
வேண்டுமிடமெங்கும் விரிகிறேன்
பொழிகின்றேன் மொழிகின்றேன்
பூகோள மயமாய்! பூகோள மயமாய்!
பொல்லா வினையேன் புகழுமாறொன்றறியேன்
பூகோளமயமாய் எல்லோரும் ஏத்தப்பணிந்து!

சிலிர்த்து நான் எழுகின்றேன்
மண்டையெல்லாம்
மணிமகுடங்களாய் மாறின
முத்துப்பவளம் இரத்தினம் பதித்த முடி
சேர, சோழ, பாண்டியர் தாம் சூடிய
ஆண்ட பரம்பரைப் பாரம் முழுவதுமாய்
அழுத்தி நெரித்து விழுத்த விழிக்கிறேன்

பொங்குசனி மங்குசனி மரணச்சனி
இங்கு பிடி சோறுக்கும் வழியற்று- உல
கெங்கும் படியேறிக் கதைகூறி அகதியெனத்
தங்கி வாழ வழிமாறிப் பின்சென்றோம்!

திறந்த பொருளாதாரத் திசையெட்டும்
பறந்து உறவிழந்தோம் ஊரிழந்தோம்
உற்றார் சுற்றந் தாமிழந்தோம்- இப்போதும்
'வெளி நாட்டார் விரட்டுவரோ?" - என்றுதான் கதிகலங்கி
முடியின்றித் தடியின்றி நிவாரணந் தானுமின்றி
முடியுமோ இப்போர்? விடியுமோ நம் வாழ்வு!
***

எண்ணமெல்லாம் சிப்பிலியாட்ட
கண்ணாடி முன் சென்றேன்
என்னே அதிசயம்
யான் தானோ? ஆர் தானோ?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டையெல்லாம் மணிமுடியென்றேன்- இப்போது
மூளை நரம்பெல்லாம்
சுருள் சுருளாய் நாகங்களாய் படமெடுத்தாடின
படமாடும் பாம்புகளின் கண்களெல்லாம்
தொ(ல்)லைக் காட்சிகளாய்த்
தொலைதூரப் புதின மெல்லாம்
தக்கபடி தந்தனவா?
தாம் விரும்பும் அதிகாரத் ததிங்கிணத்தோம் என்று
ஆம் போடும் நாடுகளின் அரசப்பயங்கர
வீம்போடு தாம் ஆடும் சூடும் நெருப்பும்- அகதிக்
காம்போடு சனம் முடிக்கும்

துப்பாக்கித் துரைத்தனத்தின் சிறுசெய்தி தானும்
வன்னி பற்றி வாராது! பலஸ்தீனம் பாராது!
ஈராக் பற்றி எரிவது தான் காணாது!
ஆப்கானிஸ்தான் மக்கள் படுந்துயர் தான் காட்டாது!
ஆபிரிக்க கறுப்பரின் அவலந் தெரியாது
வீண்டித்தது நேரத்தை வெள்ளையரின் வீரத்தை
கோரத்தை சின்ன வீட்டுச் சோரத்தைக்
காட்டிச் சொக்கவைத்துப் போகத்தைக் காட்டி
வெறும் போதை வெறியேற்றி
வன்முறையின் வடிகாலாய்
வீட்டுக்குள் கிடக்கும் வெடிகுண்டே
தொலைக்காட்சி-
கண்ணைப் பறிக்கும் காதைக் கெடுக்கும்
மூளை மறுக்கும் சிந்தனை செய்மனம்
பிணமாய் மாறும் பிரமையே கூடும்!

ரசித்து ருசித்து முப்பத்திரண்டு பல்லும்
முழுதாய் சிரித்து வாழ்வைச் சிதைக்கும்!
முழுப் பல்லும் முப்பத்து முக்கோடியாய்
கூர்கொண்டு குறிகொண்டு வெறி நின்று
உடல் முழுதும் கடித்து விறாண்டித்
தறிகெட்டு நெறிகெட்டு
இந்திரனுக்குத் துருவாசர்
இட்ட வொரு சாபமென
மந்திரத்தால் தேகமெங்கும

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிரம் கண்களாய்
துகிலுரிந்தன மக்களை மாக்களாய்!
தொங்குகின்றன தொலைக் காட்சிப் பெட்டிகள் எங்கும்
காதுகளெங்கும் கடுக்கன் தோடல்ல!
சூதும் வாதும் சுவையாய்ச் செப்பும்
வானத்து நாட்டாண்மைத்
தென்னாட்டுத் தமிழ்மொழியால்
தெவிட்டாது கொல்லு தமிழ் பரப்பவா
வானொலிக் கருவிகள் பல வர்ணப் பேர்களில்
இலையான்களாய் மொய்த்துக்
காதுகளைக் கவ்வித் தொங்குவன!

காதுக்கும் வானத்து முகட்டுக் கோளுக்கும்
நெடுந்தூர அலைக்கம்பி நீண்டு தானிருக்கும்
கைவிரல்கள் நீண்டு நுங்கு குடிப்பதுபோல்
கண்ணிரண்டும் தோண்டி என் வாய்க்குள்
திணித்தவிட்டுத் தூரத்தில் வெகுதொலைவில்
நெருப்புச் சூரியனைக் காட்டிச்
சுதந்திரச் சித்திரத்தின் அழகதனைத் தரிசி- என்பார்

கண்ணிழந்த கண்ணீர்த்துளிகள் என் கன்னத்தில்
வடிந்தபோது கண்ணீர் சூடேறி
டொலர்களும் யூரோவும் பவுணுமாய்
வாலில்லாப் பட்டமாய் வானத்தில் வடிவு காட்டிப்
பறந்தன பல வர்ணமாய்!

கால் நகங்கள் வளர்ந்தன
கை நகங்கள் வளர்ந்தன
நீண்டநெடு நகராய்த் தெரிந்தன
பின்னொரு பெருமதிலாய்
நகங்களே விறாண்டி வளர்ந்தன

நூற்றுக்கு மேற்பட்ட மாடிகளாய்
மாடிகளாய் அடுக்கடுக்காய்
பரந்தன விரிந்தன!
செப்ரெம்பர் பதினொன்று!
அமெரிக்கப் பெருநகர் மாடிகள் சரிந்தன!
பாறி விழுந்தன பார் முழுவதும்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்க்கினை பண்ணுகிறேன் பார்!- என்றார்
ஊர் எலாம் உலகெலாம் ஒன்றாய்கூடி
வேர்விட்டு நாகரிக விழுதூன்றி நின்ற
ஆப்கானிஸ்தான்! அதன் மீது ஐயகோ!

ஆர்கேட்பாரின்றியும் ஆனமட்டும் மலையுடைத்து
வீரிட்டு மக்கள் புலம்பியழ
பீறிட்டு ரத்த ஆறு பெருகியோட
ஆர்வீட்டுச் சொத்தென்று
அமெரிக்கர் ஆர்ப்பரித்தார்! அபகரித்தார்

ஆராரோ ஆரிவரோ!
ஆரடித்து நீயழுதாய்
அடித்தாரைச் சொல்லியழு
ஆக்கினைகள் பண்ணிவைப்பேன்!

வேறு,

இரணியன் என்ற சொல்
இஸ்ரேலுக்கு இனிப்பொருந்தும்
தரணியெங்கும் ஆழத் தப்புக் கணக்கோடு
பரணி பாடிப் பலஸ்தீனமதைப் பலி கொள்ளும்
இஸ்ரேலே இனி நீ மரண அடி பெறுவது
திண்ணம் திண்ணம் தித்தோம் தகதோம்

இன்னொன்று,

சி.சி. என்றொரு கவிஞர் தீட்டிய
சீட்டுக் கவியொன்று கண்டேன் கொண்டேன்

"வன்னி கொழும்பென்று நோர்வே- தூதன்
நாலாறு மாசமாய் இங்கங்கும் ஓடி
கண்டு வந்தான் ஒரு தீர்வே- அதை
நாட்டாண்மை அமெரிக்கன் குலைக்கிறான் தேடி

ஆஸ் என்றால் ஆங்கிலத்தில்
கழுதையென்றொரு கருத்து
ஆஸ்ஸி வில்ஸ் என்றால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்கத்து அனுமன்!
புலிக்கும் சிங்கத்துக்கும் சிக்கலென்றால்
கழுதை இங்கேன் கழுத்தை நீட்டுகிறது?

குரங்கு இங்கேன் அப்பம் பங்கிட
ஆர்வம் காட்டுகுது?
ஆப்பிழுத்த குரங்கு ஆவதற்கு அவசரமோ?
போங்காணும் சும்மா!
பொழுதொன்று மாறும்- தருமம்
மறுபடி வெல்லும்

- (கொழும்புத் தமிழ்ச் சங்க கவியரங்கில் பாடியது)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4

# மனிதம் மண்ணில் உடயரும் வரை

நான் ஏன் இனிப் பாட வேண்டும்
நான் ஏன் இனிப் பேச வேண்டும்
தேன் இனிது தெவிட்டாது தொடர், தொடர்
எனப் பாராட்டும் நவம் இல்லாப்பொழுது- எனக்கு
அவம் அவம் அவமே!'
-நான் ஏன் இனி-

'அது சரி' என்றோர் தலையாட்டம்
'இன்னுத் கொஞ்சம் இறுக்கிச் சொல்லியிருக்கலாம்'
'சரி, பரவாயில்லை' என்றோர் தோள்குலுக்கல்
'உது பிழை, உப்பிடியேன் பேசுவான்
இப்பிடிச் சொல்லியிருப்பின் நல்லாயிருக்கும்'
என்றன்று சொண்டு திறக்க அரும்பும் ஒரு சிரிப்பு,
இன்னுமோர் அபிப்பிராயச் சாடல் இல்லா-
நவம் இல்லாச் சபையென்ன சபை எனக்கு?
- நான் ஏன் இனி-

மழை ஓயாப் பெரு மழை
அடை மழை விடா மழை
இப்பிடியேன் அள்ளிக் கொட்டுது! காட்டுமழை!
அழுது முடிச்ச வான் மேகம்
தொழுது ஏற்றிப் போற்றிட
'பாடு நீ, பலர் கேட்க வந்துள்ளார்'
எனப் பணிக்கிறது காற்று

'காற்றே நீ என் கூற்றுவன்
நேற்றே உன்னைத் தலை முழுகிவிட்டேன்
பேந்தேன் வந்தெனைத் தொந்தரவு செய்வாய்
போ, போ ஆளைவிடு, பாட்டா உனக்கொரு கேடு
போ, போ' எனப் புளுங்கித் தள்ளினேன் வெறுத்து!
காற்றுப் பணிந்தென்முன் வந்தமர்ந்தது
'உன் தோழன் ஆவி பிரிந்ததே!
என்றவுன் கோபம் புரிவேன்
தோழா கொஞ்சம் பொறு' என்று கூவிற்று காற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பிராண வாயுவாய் வந்து
ஒக்சிசனை உள்ளிழுத்து இயங்கியதும் நானே,
காபனீரொக்சைட்டாய் வெளியே செல்பவனும் நானே
மூச்சு விடும் போது!
உலகப் பெருவெளியில் பிராணனாய் நானிருக்க
உன் தோழர் தான் உள்ளிளுக்க
தொடர்ந்து நான் அவரோடு வாழ்ந்திருந்தேனே!
ஒரு பொழுது ஓய்வுக்காய்
ஓடி உழைத்த உன் தோழன் நிறைவுக்காய்
கணப்பொழுதில் அது நிகழ- நான் விலக
பிணமானார் பிறகென்ன?
மணமாகி மக்களை ஈந்தார் நுமக்கு! அது போதாதா?

பணமே இவ்வுலகப் பூகோளமயமென்றிருக்க
குணமான தோழரவர்,
இனிக்கனகாலம் வாழ்தல் சரியில்லை
கலந்தார் என்னோடு,
காற்றானார்; கருத்தானார்
பாட்டானார், பாட்டின் பொருளானார்
பேச்சானார் தமிழ் மூச்சானார்
பிறகென்ன தோழா, பாடு, பாடு தோழா
பஞ்சி பாராதே' என்று கெஞ்சியது காற்று

நம் எல்லோர் நிறையும் இன்று
சொல்லாமல் கொள்ளாமல்
கூடியுள்ளதே அதை நீவிர் அறிவீரோ?
என் நிறை கூடியுள்ளது
சொலல் தேவையில்லை பார்த்தாலே போதும்
நிறுத்துப் பாருங்கள் உங்கள் உடலை
நிச்சயமாய் தெரியும்

போனமாதப் பொழுதொன்றில்- நவத்தின்
பொன்னார் திருமேனி எரியூட்டப்பட்டபோது
பொடி சாம்பலானார்
போனார் நவம் எனப் புலம்பினோம்

சாமானியர் எரியின்
பிராணன் கரியமிலவாயுவாகி
நிறையின்றி நீறாகும் அது நிசமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக்காரெனில் மக்னீசியமாகி
எக்கணத்தில் எரிக்கப்படுகையிலும்
பிராணனை உள்ளிளுத்து
மக்னீசியம் ஒக்சைட்டாகி
அன்னாரின் சாம்பலே நிறைகூடும்

'விதி தெரி மாந்தரெலாம்
சுடலைப் பொடி பூசி
நாமெலாம் நவம் நவம் என்றாகி
தக தகவென நிறைகூடி நிமிர்ந்தோம்
பிறகென்ன, பாடு பாடு பஞ்சி பாராதே'
என்றுற்சாகம் கூட்டிற்று காற்று

'பொழுதொன்று உனக்காய் புலர்கிறதே
உழுது நில்'லென்று சொல்லிற்று செம்மண்,
விழுதாகி விருட்சமாகி முழுதாகி நிறைந்து
மனிதப் பெருவெள்ளக் காடாய்க் கிடக்கிறது மண்

மண்ணெனைப் பாடென்கிறது
மனிதம் தனைப் பாடென்கிறது
கண் மூடிக் கவிப்பொருள் தேடலானேன்
'மண் இருக்கும்வரை'... நாரியைப் பிடித்து குந்தியது மண்
மனிதம் இருக்கும் வரை... எனப்
புறுபுறுத்தபடி பொழுதொன்றில் ஒழிக்கிறது மனிதம்

தலைப்பில் தலை சுற்றியது
மண்ணிருக்கும் வரை மனிதம் உயரும் வரையா!
மனிதம் இருக்கும் வரை மண் உயரும் வரையா!
மண்- மனிதம்- இருப்பு- உயர்வு
மனிதம்- மண்- உயர்வு- மனிதம்
உயர்வு- மண்- இருப்பு- மனிதம்
தலை மீண்டும் சுழல்கிறது
தலையை தாங்கியபடி குந்தினேன் தாவாரத்தில்;

ஆரோ பூட்டிய கதவைத் திறக்க-
தமிழர் தாம் பூட்டிய கதவைத் திறக்க
தேவாரம் பாட நானென்ன சம்பந்தரா! நாயனாரா!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரு வழியே வந்த விஞ்ஞான மாணவனைக் கண்டேன்
வினாத் தொடுத்தேன் விளங்கவில்லையென்றான்
விளங்குது என்றேன் வில்லங்கம் என்றான்
விளக்குவது என்றேன் விஞ்ஞானம் என்றான்
கணிதவியல் என்றேன் இரசாயனம் என்றான்
பௌதிகம் என்றேன் இயற்பியல் என்றான்
வட்டம் என்றேன் சதுரம் என்றான்
முக்கோணம் என்றான்
வேறொருவன் முழுவதும் என்றான்
எல்லாம் புள்ளி என்றேன் மற்றவனோ வரிச்சுற்று என்றான்
ஓகோ, அப்படியா, முடிவிலி என்றேன்
நான் அழுதேன் அவன் சிரித்தான்
அவன் சிரித்தான் நான் அழுதேன்

தமிழர் தம் மனக்கதவு திறக்க
மனிதம் மண்ணில் உயரும்வரை
பாட்டொன்று சொல்லென்று கேட்டேன்

விஞ்ஞான மாணவனோ விளக்கொன்று தந்தான்
விளக்கின் ஒளியில் மண்ணைப் பார்த்தேன் மண்ணாய்க் கிடந்தது
மானுடரைப் பார்த்தேன் அதே ஒளியில்
சூடு சொரணையற்றுச் சும்மா கிடந்தது
'என்ன இது புரியவில்லை' என்றேன், புதிர் போட்டான்

விஞ்ஞான மாணவனோ விளக்கொன்று தந்தான்
விளக்கின் ஒளியில் மண்ணைப் பார்த்தேன் மண்ணாய்க் கிடந்தது
மானுடரைப் பார்த்தேன் அதே ஒளியில்
சூடு சொரணையற்றுச் சும்மா கிடந்தது
'என்ன இது புரியவில்லை' என்றேன், புதிர் போட்டான்

பிரித்தல் பெருக்கல் கூட்டல் கழித்தல் என்றான்
'சின்னவயதில் காதில் பிடித்து கணக்கு வாத்தியார்
சொல்லித்தந்தது கொஞ்சம் கஷ்ரம்' கூனிக் குறுகினேன் நான்

மண்ணிலிருந்து மனிதரைப் பிரிக்கின் மிஞ்சுவது என்ன என்றான்
மண்ணையும் மனிதரையும பெருக்க வருவதும் என்னவென்றான்
மண்ணையும் மக்களையும் கூட்டுகையில் தேறுவது எதுவென்றான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணிலிருந்து மனிதரைக் கழிக்கையில் தோன்றுமே
அது எதுவென்றான்

'புரியவில்லை போதும் போ' என்றேன் நான்
'யோசிப்பதே இப்போ சற்றுச் சிரமமப்பா
போ நி அப்பாலே' என்றேன்
விஞ்ஞானம் படிச்ச பொடியன் விடுகிறபாடாய் இல்லை
விடையென்னவென்றான் விடாமலே!
'விளங்கவில்லை விட்டுவிடப்பா- போப்பா!' என்றேன் பொறுக்காமல்

'அங்கிள் கொஞ்சங் கேளுங்கோ,
அமைதி காத்துக் கொள்ளுங்கோ
காதைக் கொஞ்சந் தாருங்கோ
பிரபஞ்ச உண்மை சொல்லுகிறேன்
குனிஞ்சு கொஞ்சம் கேளுங்கோ' என்றான் அவன்

'ஓகோ, என்ரை வயதென்ன, உன்ரை நினைப்பென்ன' எனச் சினந்தேன்
'பொடிப்பயல் எனக்குப் புகட்டுறார் பாடம்' எனப் புளுங்கினேன்

அப்போதெழுந்த சூறைப் பெரும் புயல்
நிலத்து நீரை அப்படியே உறிஞ்சியது மேகம்
கங்கை நீர் சொரியச் சிவனுக்குபதேசிக்கும் சிறுபொடியன்
முருகன்தான் அவன்- சிவனின் காதில் பிரணவம் சொல்ல
சிவனாரோ கைகட்டி வாய் பொத்திக் கேட்கப் பொலியும்
சிவலோகக்காட்சி- சினிமாவில் வருவது போல் பூச்சொரிவர் தேவர்
கண் கொள்ளாக்காட்சி கண்டேன்- களித்தேன்
'கடவுளே முழுமுதலே முழி பிதுங்கியபடி கேட்கிறார் என்றால்
கேட்பதில் நான் என்ன குறைஞ்சா போவன்!"
எனத் துணிந்தேன்

'சரி, சரி தம்பி விடைதெரியாதுண்மை
நீயே சொல் விடையை' யென்றேன்
பொடி வலுவிண்ணன் பாருங்கோ,
ஆள் கொஞ்சங் கறுப்புத்தான், ஆனாலுமென்?"
அமைதியாய் கேட்டேன்

மண்ணை மனிதரிலிருந்து பிரிக்கிறபோது
மிஞ்சுவது குறுந்தேசியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணையும் மனிதரையும் பெருக்கும்போது
எழுவது சோசலிசம்
மண்ணையும் மனிதரையும் கூட்டும்போது
தேறுவது தேசியம்
மண்ணிலிருந்து மனிதரைக் கழிக்கும்போது
தோன்றுவது பேரினவாதம், பெருமுதலாளித்துவம்

இங்கு எல்லாவற்றிலுமே
மண்ணும் மனிதருமே ஒன்றாயிருக்க
பிரிக்கப்படுவதாலும் பெருக்கப்படுவதாலும்
கூட்டப்படுவதாலும் கழிக்கப்படுவதாலுமே
பேரினவாதம்- குறுந்தேசியம்- தேசியம்- சோசலிசம்
எல்லாமே நிகழ்த்தப்படுகின்றன

ஆக, பிரித்தல் பெருக்கல் கூட்டல் கழித்தல்
செய்யயச் சொல்வது யார்?
அதைச் செய்பவர் யார்?
தெளிவிதில் பிறந்தால் எல்லாம் சரிவரும்

பிரச்சினை என்னவென்று
உரசிச் சிந்திக்க விளக்கம் தேறும்
பலதையும் பன்மைத்துவத்தையும்
ஏகமாகப் பார்க்கவே எல்லாம் வெளிறும்

எல்லாம் ஒன்றாகத் தெரியின்
'எதிரி எவர், நண்பர் ஆர்'
என்பது கூடத் தெளிவிலாது போகும்
என்றான் விஞ்ஞானம் படிச்ச பொடியன்

தண்ணி தருவார் ஆர் எமக்கு?
ஐதரசனும் ஒக்சிசனும்
சேரும் போதே வருவது தண்ணீர்
இரண்டும் சேராவிடின் வேற்றுமை எஞ்சும்
மனிதம் தோற்கும் மக்கள் மடிவர்
அமெரிக்கனும் இந்தியப் பிதாமகரும்
தண்ணி காட்டுவார் நாளை நமக்கு
போகிறான் மாணவன் தூரத் தூரவே...
நானும் பார்க்கிறேன் தூரத் தூரவே..
தெரிகிறான் அவன் சிறு புள்ளியே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் இனி என் செய்வோம்
பிரிப்பதா- பெருக்குவதா
கூட்டுவதா- கழிப்பதா
உண்மையில் நாமிங்கு
செய்வது என்ன?

நாம் கூடியிருப்பதால்
கூட்டல் என்பதா?
தோழர் ஒருவரை இழந்திருப்பதால்
கழித்தல் என்பதா?
வெவ்வேறாய் வெவ்வேறிடத்தில் பிரிந்து நாம் வாழ்வதால்
பிரித்தல் எனப் பேசுவதா?
வருங்காலம் எமதே என்பதால் பெருக்கமடைவது நிசமே என்பதால்
பெருக்குதல் செயல்தான் சாத்தியமா?

பிரித்தலின்போதும் கழித்தலின்போதும்
உள்ளதெலாம் குறையும்
இருப்பும் உடனே மறையும்
கூட்டலின்- பெருக்கலின்போதே
உள்ளது அதிகரிக்கும்
இருப்பது செழிக்கும்
தேசியமும் சோசலிசமும்
இணைதல் என்பதே
வாழ்வுப் பின்னலின் சிக்கலுக்கு விடைபகரும்
மனிதம் மண்ணில் உயரும்
மக்கள் மண்ணில் நிமிர்வர்

'பெருக்கலும் கூட்டலும் பேணிக் கொள்வாரே
பொறுப்பதால் வெல்வார் பூமி'

பிரித்தலும் கழித்தலும் வேண்டாவே உலகில்
பழித்தது ஒழித்து விடின்

*(கந்தர்மடம், ஆத்திசூடி வீதி, கலைமகள் சனசமூக நிலைய முன்றலில் 07.11.2004ல் 'தோழர் நவம் பொதுவுடைமைப் போராளியின் நினைவுகள்' நூல் வெளியீட்டு நிகழ்வில் இடம்பெற்ற கவியரங்கில் வாசிக்கப்பட்டது.)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5

## ஊருக்கு நல்லது சொல்வேன்– எனக்கு உண்மை தெரிந்தது சொல்வேன்

பூமி உருண்டையென உண்மை சொன்ன
கலிலியோ கொலையுண்டார்
பூமி தட்டையேயெனச் சாற்றியது அதிகாரம்
பூமி உருண்டையே என்று ஏற்றது இந்நாளில்
தெரிந்த உண்மையைச் சொன்னதால்
மரித்துப் போன கலிலியோ மீளவில்லை?
ஊருக்கு நல்லது சொல்ல நான் ஆர்!
கேட்பாரில்லா இப் பாருலகில்
ஆருக்காய் நான் பாட? நல்லது என்னவுண்டு நான் பாட?
தெரிந்தது சொல்ல உண்மைதான் எங்குண்டு?
பாரதி பாரதிரப் பாடி வைத்த
மந்திரப் பாக்கனித் தேன் சொட்ட
கவிச் சொல்லெடுத்து வர்ணங்கள் கூட்டிப் பாட
யான் என்ன பித்தனா? பேயனா?
ஆரிதற்கு உடன்படுவார்?

ஆனைகள் குட்டி போடுவது போல்
எலிகளும் குட்டி போட்டனவாம்
பாரதியின் கவிக்குப் பின் நான் ஆர்?
அணில் குஞ்சாய் சிறு கவி படிப்பேன்
ஏற்றுப் பொறுப்பது நும் கடனே! என் செய்வேன் பராபரமே!

குடுகுடுப்பைக்காரன் வந்து வீட்டுப் படலை தட்டி
நாட்டு நடப்பு முதல் நாலு பத்துக் கதை பேசி
உள்ளதைச் சொல்லித்தான் உண்மையென அறிந்ததைப் படி
ஊராரை மகிழ்வித்த காலமது போச்சுது

எங்கள் வீட்டுக்குள்ளேயே
தங்கியபடி இரவும் பகலுமென
இருபத்திநாலு மணிநேரமும்
'தெரிவிப்பது நாங்கள தீர்மானிப்பது நீங்கள்' என்றும்
கூரைபிய்த்து இறங்கி வந்து
வியளங்கள் பேசுவதும்
விடுப்புகள் அவிழ்ப்பதும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குசலங்கள் கேட்டுக் குதூகலிப்பதுவும்
தொல்லைக் காட்சியாய்- வெறுந்
தொந்தரவாய் போனது நம் சீவியம்

நாற்சதுரப் பெட்டியொன்று
நம் வீட்டில் கிடக்கிறது
பொத்தானை அழுத்தியதும்- கிறிமினலாய்
நீள் சதுரப் பெட்டியாகிச்
சவப் பெட்டியாய் போகிறது
உள் நோக்கி எட்டிப் பார்க்கையில்
வாக்குப் பெட்டியாய் மாறிடும் அதிசயம் என்னே!

படலையில் சிலர்
சுடலையிதுவென வந்தார்
குடலையுருவி மாலையாய் போட்டார்
சுடலைப் பொடி பூசி
உள்ளங்கவர் கள்வன் என வருவார்
எல்லோரும் நாமொன்றாய்
வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம்
நல் நோக்குண்டாம்
தேர்தல் தினத்தில் வீட்டில் முடங்காது
ஓடிப்போய் எம்பாட்டில் ஏழு மணிக்கே எழுந்துருகி
போட்டு வரும் ஓட்டு- எங்கள்
கடவுளைக் கூட்டி வருமென்று
பிரசங்கம் செய்வார்- நல்பல
தருமங்கள் புரிவார்

சாராயம் சரியாய் வரும் சாப்பாட்டுப்
பார்சல்கள் தானாய் வரும்
செத்த மனிசரெல்லாம் ஒன்றாய்
அச் சுடலை வாக்குப் பெட்டியில்
போட்டார் தம் வோட்டெல்லாம் நன்றாய்
திரும்பி வந்த செத்தவரைப் பார்க்க
உறவினர் எல்லோரும் சென்றாரே பாரீர்!
சுடலையில் வாக்குப் பெட்டிகள் மறைந்தன
ஆண்டவன் எழுந்தருளினார்
அனைவருக்கும் அருள் பாலித்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருநாள் ஒரு பொழுதில்
முழு நிலவை விழுங்கியது நாய்
ஒளி விடும் விண் மீன்களை
உரலில் இடித்து மென்று சப்பியது குரங்கு
பளிச்சிடும் சூரியனைப்
பச்சடி போட்டு ஏப்பம் விட்டது சிங்கம்

அப்போது தான்
கருத்தரித்தாள் என் தாய் கல்யாணமாகாமலே கன்னியாய்
ஒரே சூலில் நான்கு குழந்தைகள்
அப்துல்லா செல்லையா
அமுனுகம காளிமுத்து
அடுத்தடுத்து ஒன்றாய்
படுத்திருந்தார் பாயில் நீட்டி நிமிர்ந்து

ஆரிவர்க்கு அப்பன் என்று
கேட்கின்றார் ஆரோவெல்லாம்
சுதந்திரன் தான் அப்பனென்று
சொல்லுதற்குத் துணிவில்லை
குறைப் பிரசவமாய் குழந்தைகள்
குரலெடுத்து அழவில்லை
குரல்வளையும் காணவில்லை
சுதந்திரன் தலைமறைவாய் விட்டான்
எம் தாயைத் தவிக்க விட்டு
அப்பனையே காணவில்லை
அப்பனையே தேடுகிறோம் தேடுகிறோம்
வாழ்வெலாம் தொலைத்தே!

தாயவள் தவிக்கின்றாள்- இலங்கை
மாதா துடிக்கின்றாள்
எவரெவரோவெல்லாம்
'அப்பன்' தாமென்று
உலகெலாம் பழிக்க
மரபணுப் பரிசோதனை செய்ய
டீ என் ஏ என்றார்
சேது சமுத்திரா இந்தியர்க் கென்றார்
நுரைச்சோலை சீனர்க்கேயென்றார்
மேல்கொத்மலை யப்பானுக்குத் தானென்றார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுருக்கிட்டுச் செத்தாள் என்தாய்
விருத்தெரிந்த நாள் முதலாய்
ஆரெனக் கப்பன் எனத் தெரியாக் குமரன் நான்

ஆனையிறவில் அன்றொரு நாள்
கழுத்துத் திருகி முழிபிதுங்க
யாழ்ப்பாணத் தலை கவிழ
தொங்குகிறாள் தாய்

இந்து சமுத்திரப் பாயில் எனை
நொந்து சுமந்த தாய் கிடக்கிறாள்
பங்கு போடப் பலரும் பாய்ந்து வருகிறார்
எங்குமெழுந்து நடக்கக் காலுமில்லை
ஊன்றி எழும்பக் கையுமில்லை
ஊதிப் பெருத்து வயிறுவீங்கி
என் அன்புத் தாய் சரிந்து படுத்திருக்கிறாள் சவமாய்
தயவாய் வாருங்கோ பாருங்கோ
கூடி ஒப்பாரி வைப்போம் ஒன்றாய்

தாய்க்குக் கொள்ளி வைத்தல்
வாய்க்கரிசியிடல் யார்கடன் என்றபோது
குறைப் பிரசவக் குழந்தைகள் நாலும்
பறையடிக்கத் துடித்தார்
பாசத்தால் தவித்தார்

நாலு திக்கிலும் நாய்வேஷம் போட்டோம்
குரைத்தோம் ஊளையிட்டோம்
ஒப்பாரி வைத்தோம் முகாரி இசைத்தோம்
கொள்ளி வைத்தல் எங்கடனென்று
தனித்தனியாய் கட்சி பிரிந்தோம்
கன்னை கட்டினோம்

நிலம் நீர் நெருப்பும்
காற்றும் வெளியும் எனும்
பஞ்சபூதங்கள் யாவுமின்றும்
எஞ்சியிருந்த படியால் தான்
எங்கள் வீட்டுக் குசினியில் அடுப்பெரியும்
உலை கொதிக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனாலுமென்?
இன்னுமிது எத்தனை நாள் பலிக்கும்

காற்றை மறித்துக் கட்டிடம் எழுப்பும்
மரங்கள் தறிக்கும் நிலங்கள் பறிக்கும்
தண்ணீரையே விற்கும் தரித்திரந் தொடரும்
ஓசோன் வெளியழியும்- ஐயகோ
வணிகப் பேராசைக்கு
எல்லாம் உலக மயம்

என் தாய் பலியானாள்
தவிச்ச வாய்க்குத் தண்ணீர் கொடுக்க வக்கில்லாப்
பிள்ளை நான்! பேய்ப் பெடியன்!
வலது குறைஞ்சவன் நான்
வயிற்றுக்குச் சோறிட வாய்க்கப் பெறாதவன்

என்னையே நான் வெறுத்தேன்
என் இதயத்தைத் தேடுகிறேன்

என் நுரையீரல் கவ்வியது என் இதயத்தை
என் குடலை விழுங்கியது என் இரைப்பை
என் காதைக் கடித்தது என் வாய்
என் கண்ணைக் குத்தியது என் கை

தாயுடலைப் பிய்த்தோம்
தலையில் தீ வைத்தான் ஒருவன்
வயிற்றில் கொள்ளி வைத்தான் மற்றவன்
தோளில் நெருப்பால் சுட்டான் மறுமகன்
பிள்ளைகள் நால்வரும்
பிரித்துப் பிரித்துப் பிய்த்தெறிந்தோம்
நம் தாயை!
மொத்தமாய் வைத்தோம் கொள்ளி
முன்னையிட்ட தீ முப்புரத்திலே
பின்னையிட்ட தீ தென்னிலங்கையிலே
அன்னையிட்ட தீ அடி வயிற்றிலே
யானும் இட்ட தீ மூழ்கமூழ்கவே!

மனித உரிமை என்பது விழுமியம்
ஜனநாயகம் என்பது விழுமியம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலை என்பது விழுமியம்
சுதந்திரம் என்பது விழுமியம்
சுயநிர்ணயம் என்பது விழுமியம்
புரட்சி என்பதும் விழுமியம்

*(19.09.2005ம் திகதி திங்கட்கிழமை புத்தளம் இந்து மத்திய கல்லூரி வெள்ளிவிழாக் கவியரங்கில் வாசிக்கப் பெற்றது)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6

## எமக்கும் சிவக்கின்ற வானம் வரும்

1
வியாழன் மாற்றம் வெள்ளி உச்சம்
சனி ஏழரை முடிஞ்சுது நேற்று
இனி ஞாயிறு இன்று
வெத்திலை கையும் உடனே
யானையும் சிங்கமும் அழிய அழிய
தொழிற் சங்கப் பண்ணையார்
வயிறும் பத்தப் பத்த
எங்கள் பானையும் உலையும் எரிய எரிய
வாழுவம் மக்கள் நலமே சிறந்தது
2
ஆண்டு இருபத்தாறு ஆகுது கட்சிக்கு வயது
ஆண்டு எழுபத்தெட்டு ஆரம்பமானது தொட்டு
வீரமாய் விளைந்த இத் தொட்டிலில்
'ஆராரோ ஆரிவரோ' தாலாட்டுப் பாடி சீராட்டி ஓராட்டி
'ஆராரோ வெல்லாம் தொழிலாளர் என்பதனால்
ஊராரெல்லாம் உலகெல்லாம் ஒன்றாய் திரட்டி
சிவப்பு எனும் மந்திரக் கயிற்றில் கட்டுண்டோம்
கட்டியவர் யார்?
தோழர் தலைவர் கே.ஏ. சுப்பரமணியம்
பொதுவுடைமைத் தொண்டர் சி. கா. செந்திவேல், தோழர் சூடாமணி, இ. ரவி,
இ. தம்பையா, இராஜேந்திரன், வன்னியசிங்கம், தணிகையரோடு
நாமெல்லாம் சிரமேற் கொண்டோம்
உலாவர ஒன்றானோம்
ஊரோடு உறவோடு தோழோடு தோழராய்
புதிய ஜனநாயகக் கட்சிப் பெரும்படையில்
நீண்டபயணம் வீறோடு நடப்போம் விரைந்து!
3
அரசியல் பேச அருகதை வேண்டும்
கட்சியென்று சொல்ல கம்பீரம் வேண்டும்
அருகதையற்றோர் கம்பீரமிழந்தோரையெல்லாம்
அரசியல் பிழைத்தோரென்போம்
அன்னார் பிழைப்பெல்லாம் இலக்கியம் தேய்த்தல்
கலையில் புளுங்குதல், எழுத்தை விற்றல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லும் செயலும் ஒன்றாயிராது
தூய்மையாய் இலக்கியச் சூரர் எனத் தாம் புகழ்வார்
அமைச்சர் ஒருவர் அருகில் எவரிருப்பாரெனக்
குரங்குகளாட்டம் கொப்புக்கள் தாவி குசாலாய் சீவிப்பது
தேர்தல் வெல்லும் கட்சியில் விலாசம் தேடுவது
ஓசியில் சீவிப்பதே செல்லும் அரசியலென்றிப்போது
வாய்மை தவறோமென்று
வர்க்க அரசியலுக்கு வாய்க்கரிசி போடுவார்

சமயம் என்பார் சண்டை செய்வார் சன்னதங் கொள்வார்
சகிப்புத் தன்மை சற்றேனும் இல்லார்
பாய்வோர் பக்கம் சாய்வோம் என்பார்
சரிப்படார் இவர் இனி உருப்பட்டார்

தேர் என்பார் தீர்த்தம் என்பார் கரை என்பார்
லாலாப் பாடுவார் பண்பாடெனப் பம்மாத்துப் பண்ணுவார்
சடங்கு கூத்தென்று சாகசஞ் செய்வார் மிக்க சஞ்சலம் கொள்வார்
தாம் மட்டும் தனித்துக் கரை சேர்வதே
தம் வித்தையெனப் புகழ்வார் - எனப்பல சொல்வார்

ஊர் கூடும் என்று நாம் ஒய்யாரமாய் ஒதுங்கலாகாது
வேர் தறிக்க ஓநாய்கள் என்.ஜி.ஓ. ஆனார்கள்
யார்கெட்டும் என்ன அவரவர் தம்பாடு
அரசியல் 'ஆனா' அவர்க்கு ஆகாது
ஆனானப்பட்ட ஆள் பெருமானாக அமெரிக்கத் தாசராக
இந்திய பிராந்தியப் பித்தராக
ஏகத்துவத் தலைவரெனத் தலை பிசகி
பாராளுமன்றப் பக்தரெல்லாம் உலகமயத்துக்காய் உருக்கொண்டு
கொத்மலையை விற்றார் தம் கொள்கையெல்லாம் தோற்றார்

உலகத்துத் தமிழுக்கெல்லாம் தலைமகன் தான்தானாம்
உலகெல்லாம் சுற்றும் சந்திரசேகரப் பெருமகனார்
தன் தோட்டத்தில் உலைவைக்கத் திணறும் தோழியர்க் கென்ன சொல்வார் இனி!

முகவரியில்லாது முடமாக்கப்பட்டோம்
தெருவெளியெங்கும் மண்டை யோடேந்தினோம்
எசமான் வீடுகளில் எரியூட்டப்பட்டோம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரேபியரில்லங்களில் அடிமைகளாய் அடியுதைப்பட்டோம்
ஆகாய விமானத்தில் அருவருப்பாய் உமிழ்ந்தார்
தேயிலையில் எங்கள் தேசத்தை இழந்தோம்
வாயில்லை எங்கள் குரல்வளை நெரித்தார்
நோயிலே முடங்கவும் நிலமில்லை வீடில்லை
நீரில்லை காற்றில்லை காவாந்து பண்ணுதற்கும் ஆருமில்லை
கவ்வாத்துக் கத்தியொன்றே
எங்கள் கரங்களில் துடிக்கிறது
கவ்வாத்துக் கத்தித் துடிப்பின் சத்தம்
காதுக்குக் கேட்கிறதோ
பம்மாத்துப் பண்ணும் பாட்டன் பரம்பரையின்
கொந்தராத்துச் செய்ய நாமென்ன குப்பனும் சுப்பனுமா?
கடந்த நூற்றாண்டு காலாவதியானது காணும்
இளந்தொழிலாளர் நாம், இளந்தளிர் கொழுந்தானோம்

நட்சத்திரங்களைக் கோர்த்து மார்பிலே மாலையெனச் சூடுவோம்
வர்ணங்கள் பல காட்டும் வானவில்லை முறித்து
மணமகளை மணம் முடிப்போம்
மலையகம் காப்போம்
வானத்து வெளியெங்கும்
தேன் நிலவும் வழிகாட்ட
பிரபஞ்சத்துச் சூரியரெல்லாம்
ஒன்றாய் கூடி வடம் பிடிக்க
தேரேறி உலா வருவோம்

எமக்கும் சிவக்கின்ற வானம் வரும்.

*(புதிய-ஜனநாயக கட்சியின் 26வது ஆண்டுவிழா அட்டன் நகரில் நடைபெற்றபோது வாசிக்கப்பட்டது. 15.08.2004)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7

# கூடிப் பிதற்றலன்றி

வேடிக்கை மனிதர் வேந்தராய் ஆனார்
கூடிக் கைத்தொழ கோலோச்சுகின்றார்
ஆடிக்கலவரம் ஆவணி அமளி எல்லாம் அலுத்து
ஊழித்தாண்டவம் உருக்கொண்டெழுந்து
ஆளின்றி அடையாளம் எதுதானுமின்றி
ஒன்றல்ல பத்தல்ல பல்லாயிரம் தலைகள்
என்னென்று கொன்றார்...?

பல்லக்கில் செல்கிறாரோ?
செல்வாக்கான சீவியந்தான்
ஏது சாட்சியம்?

புள்ளி விபரம் இல்லை
குடிசன மதிப்பீடு இல்லை
வெள்ளைக் கொடியோடு வந்தவர் வீழ்ந்தார்
சரணடைந்தார் எவரெனிலும்
அரவணைத்து ஆற்று கருமமென்றோ
சனங்கள் சொல்வார்!

சனதருமம் நாம் மறந்தோம்
சண்டியர் சொல்வதில்
சன்னதம் கொண்டோம்
அண்டிப் பிழைக்கும் ஆளிருக்கும் வரை
ஆர் தான் வென்றென்ன?
வெல்லும் பக்கம் நாம் செல்வோம்
வெல்லும் ஆளே நம்மாள் என்போம்
ஆர் செத்தாலென்ன கெட்டாலென்ன
பார் முழுதும் இதுதான் நடக்குது!

பார் வெண்டவன் எங்களைக் கொன்றால்
வேறையார் வருவார் எங்களைக் கிண்டக் கிளற,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெண்டவனை விழுத்த இன்னொரு வேண்டியவன்
வெல்லுறவன் இல்லாமலா போவான்?
இன்னொருத்தன் வெல்ல வருவான்
அவனும் கொல்ல வந்தால்
அவனை விழுத்த மற்றொருவன்
என்றென்ன இல்லாமலா போகும்!

தேர்தல்... திருவிழா?
கொலோனியம் தந்த கொல்காவியந்தான்
மிலேனியம் மீதிலும் மிஞ்சுவதாமோ?
ஆளென்ன மாறியென்ன?
தலையணை மாத்தியென்ன
தடிமன்தான் மாறுமோ?
பொரிச்சுத் தின்னவா?
அவிச்சுத் தின்னவா?
மெலிஞ்ச மனுசர் நாம்
எங்களைத் தின்னுவது என்ற கேள்விக்கிடமின்றி
ஆசிய மண்ணும்
ஆபிரிக்க இருளும்
இலத்தீன் அமெரிக்க மக்களுமே
அம்மக்கள்
தெற்கிலே நாம்
இயம காண்டத்திலே உழல்கிறோம்

ஒடுக்கப்பட்ட தமிழர்கள், முஸ்லீம்கள், மலையகத்தார்
பறங்கியர், மலாய் இனத்தவர், வேடர்கள்
சிங்களத் தொழிலாளர்கள், உழைப்பாளர்கள்
மக்களெல்லாம் மனிசராய் வாழவில்லை
ஆக்களாயே மாழ்கின்றார்
பூக்களாய் உதிர்கிறார்
பிஞ்சுகளாய் கருகுகிறார்
எக்கேடு கெட்டால்தான் எவருக்கென்ன?
போடுங்கள் புள்ளடியென்று
புளுங்குகின்றார், புலம்புகின்றார்
புள்ளடி என்று பிழைபோட பேயரா நாங்களென்ன?
வென்றவர்கள் வரலாறு நேற்றைய கதை
எங்களை பொரியுங்கோ
அல்லாட்டில் அவியுங்கோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படி ஒப்புதல் கொடுக்க?
ஏன் என்று கேட்க
எதற்கு என்று கையுயர்த்த
எப்படி என்று விளக்கம் தொடுக்க
எங்களுக்கு ஆகாதா?
'எதிர்ப்பு' என்பது எங்கள் உரிமை ஆகாதா?

வென்றவர் பக்கம் நின்றவர்க்கு என்ன நன்றி?
கொன்றவர் பக்கம் சென்றவர்க்கு என்ன நன்றி?
மனிசர் பக்கம் நிற்பதற்கும்
கேள்வி யெழுப்பி வாதம் புரிவதற்கும்
தடை என்ன?

உங்கள் நிகழ்ச்சியும் நிரலும் உங்களுக்கானது
எங்கள் நிகழ்ச்சியும் நிரலும் எங்களுக்கானது
உங்கள் கூட்டமும் உங்கள் கூவலும்
எங்களுக்கானதல்ல

இருவேறு மக்கள்
இருவேறு உலகங்கள்
உலகத் தொழிலாளரும்
ஒடுக்கப்பட்ட தேசங்களுமே
எங்களின் உலகம்!
தோற்றவர்கள் வரலாறு நாளைய பாதை

ஆற்றை பக்கமென்று வென்றவரைத் தேடி
அங்காலை இங்காலை அலையாமல்
எங்களாலை முடியுமென்று
எல்லோரும் ஒன்றாவோம்

'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு- நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்- இந்த
ஞானம் வந்தால் பிறகெது வேண்டும்
பாரதியின் மந்திரம் பாரதிரச் செய்யும்
அரக்கர்கள் சூரர்கள் படையணி கவிழும்
தெருக்கள் ஒழுங்கைகள் புழுங்கலரிசி அவியும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஓட்டியும் திருக்கையும் சுறாவும் மலியும்
ஒட்டிய வயிறுகள் புடைக்கும்
கட்டிய விலங்குகள் ஒடிக்கும்
எங்கள் கரங்கள் உயரும்

*(தேசிய கலை இலக்கியப் பேரவையின் தலைமைப் பணிமனையில் கடந்த 06.12.2009 ஞாயிற்றுக்கிழமை பேராசிரியர் க. கைலாசபதியின் 27வது ஆண்டு நினைவு நிகழ்வில் இடம்பெற்ற கவிதா அரங்க ஆற்றுகையில் 'கூடிப்பிதற்றலன்றி' எனும் தலைப்பில் வாசிக்கப்பட்ட கவிதை)*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8

# ஒரு சில விதி செய்வோம்

பலர்:

ஒரு சில விதி செய்வோம்- நாம்
ஒரு சில விதி செய்வோம்
கலியுக சதி கொய்வோம்- நாம்
கவியுக மதி செய்வோம்

ஒருவர்:

'விதி செய்ய வேணும்'
'ஏன் விதி செய்ய வெளிக்கிட்டீங்கள்
நீங்கள் ஆர் விதி செய்ய?
வீதி போட வலு பொருத்தம்
கூலியாய் போங்கோ- வலு
சம்பளம் கிடைக்கும்...'
என்ன விசரே உங்களுக்கு
விதி செய்யப் போகினமாம் விதி!

காசு இருக்கா? கையிலை இருக்கா?
பேப்பர் இருக்கா? ரீவி இருக்கா?
விதி செய்ய உங்களுக்கென்ன விதி இருக்கு!

சொல்லுச் செல்ல வேணும்
செல்ல வேணுமெண்டால்
காசு கொள்ளை வேணும்!

மூலதனம் வேணும் முழுசாய்- பல்
தேசிய கொம்பனி வேணும் குளோசாய்
ஆள் வேணும் அரசு வேணும்
ஆதிக்க வசதி வேணும்
ஆசை வேணும் அதுக்கும் மேலை
பேராசை வேணும்

பூகோள மயம் எனும் பொன்மனைச் சீவியம்- வேணும்
அதுக்கும் மேலை... அதுக்கும் மேலை
'தமிழ்' எண்டு சொல்லும் யாவாரம் வேணும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசிருக்கா விதி போட உனக்குப்
பேரிருக்கா விதி பாட- வெறுங்கை
விதி போடுமா! - தலைவிதி
முதல் மாறுமா?

ஏழைப் பரதேசிக்கு ஏற்றமிருக்கா?
ஊழையிட்டு என்ன பலன்? என்ன பலன்?
கோழையாகிப் போகத்தான்
ஏழைப் பரதேசிக்கு ஏற்றமிருக்கா!

இன்னொருவர்:

ஊரைச்சுத்திக் கோயிலுகள் உயருது உயருது
கோபுரம் வான்முட்ட வளருது வளருது
புளியடி வைரவர் பெருங்கோயில் ஆகுது ஆகுது
மருதனா மடத்தில் அனுமன் திமிருது திமிருது
மடத்தை இடத்தை பிடிக்குது பிடிக்குது- ஆளை
முடித்து வைக்க கொப்பு தாவுது தாவுது - தாவுது!

மற்றவர்:

வழி கேட்டுப் போறேன்
வழி தேடிப் போறேன்
வழி காட்ட வாறியளோ, வாறியளோ!
என்னை விட்டுப் போறியளோ- போறியளோ

வேறொருவர்:

உண்மையே உன்ரை விலை என்ன சொல்லு
சிரிப்பே உன்ரை விலை என்ன சொல்லு
டொலராய் கிடக்குது காசு தாறன்
பவுண்சில் கிடக்கு எடுத்துத் தாறன்

சந்தோசம் வேண்டப்போறேன்- நான்
சந்தோசம் வேண்டப்போறேன்
என்ன விலை சொல்லுறாய்- நீ
எனக்கு வேணும் சந்தோசம்
சந்தோசம் வேணும் சந்தோசம் வேணும்
-ஐயா சந்தோசம் வேணும்
-அம்மா சந்தோசம் வேணும்
பசியுமில்லை - நான் பிசியுமில்லை - மனச்
சந்தோசம் வேணும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசை பெருந் தரித்திரம் என்பது
அந்தக்காலம் - ஐயா
அந்தக்காலம் -அம்மா
அந்தக்காலம்
பேராசையே பெருமனிதர் சாத்திரமாவது
இந்தக்காலம் ஐயா
இந்தக்காலம் அம்மா
இந்தக்காலம்

ஆசை குறைந்து அளவாய் வாழ்ந்தது- அந்தக்காலம்
ஆசை பெருத்து உலகை ஆள்வது - இந்தக்காலம்
காட்டை வளர்ந்து வேட்டையாடியது - அந்தக்காலம்
காட்டை அழித்து கோட்டை ஆளுவது - இந்தக் காலம்

உலகெங்கும் பறந்தோம்
ஊரையும் பிரிந்தோம்
உறவையும் இழந்தோம்
உயிரே நொந்தோம்

தாயைப் பிரிந்தோம்
தந்தையை மறந்தோம்
பிரிந்தோம் பறந்தோம் மறந்தோம்
திரிந்தோம் நொந்தோம் இழந்தோம்

உயர்வு தந்ததா?- வாழ்வின்
உண்மை புரிந்ததா?
அன்பு கெட்டதா? எங்கள்
இன்பம் வெந்ததா?

டொலரில் மரம் நட்டோம்
பவுண்சில் உரம் இட்டோம்
பட மரமாய் பாதி வீழ்ந்தோம்
உண்மை நெஞ்சைச் சுட்டதா?
நன்மை துளிர்ந்து விட்டதா?
உயர்வு தந்ததா?...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கடை காசுக்கு வீட்டிலை மதிப்பில்லை
எங்கடை உழைப்புக்கு நாட்டிலை மவுசில்லை
மோபைல் எங்கடை கழுத்திலை தொங்குது
ரீவி எங்கடை கட்டில்லை தூங்குது
எங்கடை உழைப்பு தற்கொலை செய்யுது.

வெளியிலை இருந்து ஊருக்கு வந்தால்
உற்று உற்றுப் பாக்கினம்
பற்று வரவு கேட்கினம்
பற்றுப் பாசம் தொலைக்கிறம்

பறவைக் காவடி பாக்கலாம்
    வாருங்கோ வாருங்கோ - ஊருக்கு
பட்டும் நகையும் சாத்தலாம்
    வாருங்கோ தேருக்கு ஊருக்கு

உலகைச் சுற்றி வலந்தான் வந்தோம்
    உறவே வற்றி பலந்தான் இழந்தோம்
தமிழைப் பிள்ளைகள் மறக்கவே நொந்தோம்
வீட்டை வாசலை ஊரில் விட்டோம்

பறந்து பறந்து பணந்தேடி
பாவக் குளத்தில் நீராடி
உயர்ந்து சிறந்து வளர்ந்தோம்? நாம்
உலகைப் புரிந்து கொண்டோமா?

எல்லாம் தலை எழுத்து எல்லாம் தலைவிதி
அரச பரம்பரை ஆட்சிப் பரம்பரை
ஆண்ட பரம்பரை அமெரிக்க இந்திய அகிலம்
சூதாட்டமாடி நாட்டை இழந்தம்
கட்டின மனிசியை காட்டிலை வித்தம்
பெத்த பிள்ளையைச் சுடலையிலை எரிச்சம்
அனுமன் வந்தான் ஊரை எரிக்க!
அதுக்கொரு பெயர் தான் தூது! தூது!

காசுப் பெறுமதி குறைஞ்சுது
காசு ஆசுபத்திரி வந்திது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி ரியூசன் கண்டனம்
கல்யாண மண்டபம் அதிர்ந்தனம்
வாகனம் பெரிசாய் ஓடுறம்
வீதியள் அகலமாய் காணுறம்
உலகத்துச் சாமான் குசினிக்கை!

ஊராரெல்லாம் உலகெலாம் பரவ
உலகுப் பொருளெல்லாம் வீடெல்லாம் நிரவ
உலக மயமாய வீதி வலம்வர
காவடிச் செண்டில் கைகள் கவர
கை காட்ட டாட்டா சொல்லி
அமெரிக்கா எழுந்து வர
வேட்டி சால்வை உரிந்து களர
கோட்டும் சூட்டும் உடம்பிலை உருவ
கூட்டமாய் கும்பிடு போட்டம் - பிறதட்டை
சாஸ்டாங்க நமஸ்காரம்
அரோகரா! அப்புசாமி அரோகரா!

பாரத மாதா பாத்திருக்க
மோடி ஐயா ஓடி வர
கோடி குடிசை காட்டிவர
கடல் மீனெலாம் தொப்புள்
கொடியில் வேக- எங்கள்
பவளப் பாறையெலாஆம்
றோலரால் கவிழ
தாலியறுத்த தமிழரெல்லாம் - குரலெடுக்க
சம்பூர் கூனித்தீவு குறுக
சங்கமில்லாச் சம்பந்தர் தேவாரம் பாட
பாரத மாதாவே பணிந்தம் அம்மா
சாகாதிருக்க ஒரு வரம் தாரும்- தாயே!
உன் விதி வசம் வீழ்ந்து கெட
எந்தனுக்கு வரம் ஒன்று தருவாய் தாயே!
மோடியே கூடி அருள் புரிவாய்

ஒருசில விதி செய்வோம் - அதை
எந்நாளும் காப்போம்.

-உழைக்க வேணும் எங்கடை மண்ணிலே உழைக்கும் நிலை வேணும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உழைச்ச காசிலை உண்ண வேணும்
- அறிவுக்கல்வி சிறக்க வேணும்
- ஆரோக்கிய வாழ்வு முதலில் வேணும்
- விளையாட வேணும் நிலத்தில் கெந்தி தாச்சி ஓடி மறிக்க வேணும்
- நாடகம் பாட்டு வேணும் கூத்துப் பாக்க ஆசை வேணும்
- பெண்கள் நிமிர வேணும்
-சாதி பேதம் அகல வேணும்
- இனச்சண்டை ஒழிய வேணும்
- எல்லோரும் மகிழ வேணும்
- எல்லோரும் மகிழ வேணும்
- இன்பம் பெருக வேணும்
- இதயம் நிறை காதல் இனிக்க வேணும்
- பொதுமை அறம் வேணும் வேணும்
- உலகில் அது நிலவ வேணும் வேணும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூவிப்பிதற்றலன்றி

## கவியரங்க கவிதைகள்



978-624-93177-1-0

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org